Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 352
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க தை 17 ஷவ்வால் 30 புதன்கிழமை (31-1-68)

ஈழநாடு சந்தா

மூன்று மாதம்	—	ரூ. 14-00
ஆறு மாதம்	—	ரூ. 26-00
ஒரு வருடம்	—	ரூ. 50-00
வாரப்பதிப்பு மாத்திரம்		
மூன்று மாதம்	—	ரூ. 4-00
ஆறு மாதம்	—	ரூ. 7-50
ஒரு வருடம்	—	ரூ 14-00

முற்பணம் கட்டவேண்டும்.
தபால் மூலம் அல்லது ஆள் மூலம் அனுப்பப்படும்.

தமிழரசுக் கட்சி

தலைவர்களின் விளக்கத்தை பொதுச்சபை ஏற்றது

மார்ச் 12-ந் திகதி மீண்டும் சபை கூடும்

யாழ்ப்பாணம், புதன்

மாவட்டசபை நகல்மசோதா பரிசிலனை செய்யப்பட்டு தேசிய அரசாங்கத்திலுள்ள இதர அரசியல் கட்சித் தலைவர்கள் அதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுவிட்டார்களென்றும் வெகுவிரைவில் இந்த மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படுமெனவும் உள்ளூராட்சிஅமைச்சர் திரு. எம். திருச்செல்வம் உட்பட தமிழரசுக்கட்சித் தலைவர்கள் தெரிவித்ததாகவும் இதை தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை பெரும்பாலும் ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும் தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முற்பகல் பத்து மணிக்குக் கூடியது. கூட்டத்துக்கு திருமலை எம். பி. திரு எஸ். மாணிக்கராசா தலைமை வகித்தார்.

கூட்ட ஆரம்பத்தில் பரபரப்பும் காரசாரமான பேச்சுக்களும் இடம்பெற்றதாயினும் இப்போதுள்ள நிலைமையைக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. அமிர்தலிங்கமும் அமைச்சர் திருச்செல்வமும் எடுத்துக்கூறியதும் பரபரப்பு அடங்கிவிட்டதாக அறியப்படுகிறது.

மாவட்டசபை மசோதாவின் விபரங்களையும் ஆளும் கட்சித் தலைவர்கள் நடத்திய ஆலோசனைகள்பற்றிய விபரங்களையும் திரு. அமிர்தலிங்கம் பொதுச் சபையில் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடம் அக்கறை காட்டவில்லையென்று பொதுச்சபை அங்கத்தினர் பலர் குறைகூறியதாகவும் இனியாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சி கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர்கள் கோரியதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக எம். பிக்களைக் கொண்ட தேர்தல் அபேட்சகர் நியமனக் குழுவொன்றை நியமிப்பது பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கல்முனை இடைத்தேர்தல், மாவட்டசபை மசோதா ஆகியவற்றின் நலன்கருதி மார்ச்மாதம் 12-ம் திகதி மீண்டும் பொதுச்சபை கூடி நிலைமையை ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 15ம், 16ம் திகதிகளில் நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தின்பின் நடைபெற்ற அரசியல் பிரச்னைகள் சம்பந்தமாக கட்சிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் இங்கு விளக்கிக் கூறினார். (கா நி)

சதி வழக்கு

குற்றச்சாட்டுகளில் மாற்றம் செய்ய அனுமதி

கொழும்பு, செவ். 1962ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தேசிய அரசாங்கத்தைச் கவிழ்க்க சதித்திட்டம் வகுத்ததாகக்குற்றஞ்சாட்டி வண ஞானசிக, முன்னாள் இராணுவத்தளபதி மேஜர் உடுகம ஆகியோர் உட்பட மற்றும் பலர்மீது தொடரப்பட்டுள்ளவழக்கு, கொழும்பு உயர்நீதிமன்றத்தில் இன்று தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஜூரிகளை இளைப்பாற அனுப்பிவிட்டு அட்டர்ணி ஜெனரல் தெரிவித்த சில கோரிக்கைகளை நீதியரசர்கள் கேட்டனர். இதன் முடிவில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளில் திருத்தம் செய்யவும் மேலும்சாட்சிகளைச் சேர்த்துக்கொள்ளவும் அட்டர்ணி ஜெனரலுக்கு அனுமதி வழங்கினர். இதன்பின் நீதிமன்றம் நாளைக்காலைவரை ஒத்தி வைக்கப்பட்டது.

பதக்கம், சான்றிதழ்

கவிஞர் நாகராஜன் பெற்றுக் கொண்டார்

யாழ்ப்பாணம், புதன் இரண்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சிமகாநாட்டையொட்டி நடைபெற்ற கவிதைப்போட்டியில் வெற்றி பெற்ற இலங்கைக் கவிஞரான திரு. இ. நாகராஜன் தமக்குரிய பதக்கத்தையும் சான்றிதழையும் நேற்று பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம்பெற்றுக்கொண்டார்.

8-ம் பக்கம் பார்க்க

மொழிப் பிரச்னைக்கு

அண்ணா கூறும் பரிகாரம்

தெனாலி, ஜன.30

'மொழிப்பிரச்னைக்கு சரியான சமயத்தில் கல்விமான்களும் அரசியல் தலைவர்களும்நல்லதொரு தீர்வு காண்பதற்கு வசதியாக மொழிப்பிரச்னையை சில வருடங்களுக்கு ஒத்திவைத்துவிட வேண்டுமென்றும் அதுவரை ஆங்கிலம் நீடிக்கலாமென்றும் தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

தெனாலியில் மாணவர் மன்றம் ஒன்றில் உரைநிகழ்த்துகையில் அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

நாட்டின் ஆட்சிமொழியாகும்தகுதி இந்தியமொழிகள் எதற்கும் இப்போது இல்லை என்று திரு. அண்ணாதுரை கூறினார். இந்தியாவின் சுயாதிபத்தியத்திலும் ஒருமைப்பாட்டிலும் எனக்கு பற்று அதிகமிருக்கிறது. ஆனால் எஜமான், ஊழியர் என்ற நிலை இல்லாது எல்லோரும் சமமாக வாழவேண்டும் என்று அவர் சொன்னார்.

மாணவ ஆசிரியர் பரீட்சைக்குரிய 'பொது அறிவும்-உள்ளூர் அறிவும்' மாதிரி வினாக்களை 6-ம் பக்கத்தில் காண்க.

"மசோதா இறுதிவடிவம்தெரியும் வரை காத்திருப்போம்"

தமிழ் காங்கிரஸ் காரியக்குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

தேசிய அரசாங்கத்திலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் மாவட்டசபை மசோதாபற்றி பரிசீலனை செய்தபோது, அதனைஎதிர்த்து 19 மணித்தியாலங்கள் பேசியதாகவும், இதுவரை கொள்கையளவில் கூட தான் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடந்த தமிழ்காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறியதாகத் தெரியவருகிறது.

மாவட்டசபைமசோதாவில் கால்பங்குதான் பரிசீலனை செய்யப்பட்டிருப்பதாகவும், அரசியல் கட்சித் தலைவர்களால் இன்னும்முக்கால பங்கு பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்றும், அதன்பின்சட்டம்வரைபவர்களால் தயாரிக்கப்பட்டு, மந்திரி சபையால் பரிசீலனை செய்யப்பட்டு பாராளுமன்றக்குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபல மாதங்கள் செல்லுமென்றும் திரு.

[8-ம் பக்கம் பார்க்க]

'பொருளாதார புரட்சி ஏற்படுத்த வேண்டும்'

பிரதமரின் விருப்பம்

கொழும்பு செவ். உணவுஉற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தில்மேலும்மேலும் ஈடுபட்டு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தவேண்டுமென்றும் உணவில் தன்னிறைவு காண உழைத்து நாட்டைச் சுபீட்சப்பாதைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நாட்டின் இளைஞர்களுக்கு இன்று வேண்டுகோள் விடுத்தார்.

பாடசாலை மாணவர்களுக்கான இரண்டுநாள் வேலை அனுபவத்திட்டத்தை பிரதமர் இன்று கேகாலையில் ஆரம்பித்துவைத்தார்.

இந்தவைபவத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ இரியகொல்ல பேசுகையில், வேலை அனுபவத்திட்டம் கல்வி அமைப்பையே மாற்றிவைத்திருக்கிறதென்றார். உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண இளைஞர்கள் முன்வந்து உழைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

வெங்காயக்கடை!

தரமான வெங்காயக் கடைகள் விற்பனைக்குண்டு. தேவைக்கு எம்முடன் கடித மூலமோ அல்லது நேராகவோ தொடர்புகொள்ளவும். ஆ. தாமோதரம் பிள்ளை, C/o ஐ. சின்னத்துரை அன் சன்ஸ், 13, பஜார் லேன், யாழ்ப்பாணம். போன்: 7157 1832

காணி

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக வியாபார ஸ்தாபனம் குடியிருக்க உகந்த காணிகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- சோமசுந்தரம் பதிவாளர், தெல்லிப்பளை. 1850

முதிரை ரூ. 8/-, மில்ல ரூ. 7/50, ஹல்மில்ல ரூ. 9/50. பாலு, மெற்தோரா, அலம்ப, கஹமுல்ல, நெரலு, கொலன்ன, விர, கிலிகுலா மற்றும் கல்குலியா ரூ 7/-. முதலியன கியூபிக் அடி வீதமாக பிரதான வீதியில் கொள்வனவாளரின் லொறிகளுக்கு ஒப்படைக்கப்படும். சுற்றுவிட்டம் சுமார் 3 அடி. விண்ணப்பிக்கவும்;- எச். எம். ஆசீர்வாதம், ஊவாகுடா ஓயா, திசமாராம வழியாக. 1814

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6 30, 10-00 மணி

காந்தாராவ்-இருஷ்ணகுமாரி நடித்த

வீரத்திலகம்

விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் — கண்டி பிரதான ரோட்டில் சாவகச்சேரி மதுபரிபாலன சந்தோருக்கு அருகாமையில் Excise Station] கட்டிடங் கட்ட, குடியிருக்க வசதியான தென்னங்காணி சுற்றுக்கட்டுக் கிணற்றுடன் நிலப்பரப்பு 12 ஒருமித்தேனும் அல்லது அதில் அரைவாசியேனும் விலைக்கு விற்க இருக்கின்றது. விரும்பியவர்கள் தொடர்புகொள்ளவும்: மு. நா. மார்க்கண்டு, ஏல விற்பனையாளர், சாவகச்சேரி. 1852

தேவை

ஆண் பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் சந்திக்கவும். ராஜா இன்டஸ்றீஸ் அலுவலகம், 2-ம் குறுக்குத்தெரு. கண்ணன் அச்சகம், நல்லூர். 1848

கல் உடைக்கும் தொழிலாளர்கள் தேவை. கியூப்புக்கு ரூ. 10/- வீதம் நாள் சம்பளம். விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசீர்வாதம், உபதபாற் கந்தோர், ஊவாகுடா ஓயா, திசமாராம வழியாக. 1811

ஆடு திருத்தும் கொந்தராத்துக்காரர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசீர்வாதம், உபதபாற்கந்தோர், ஊவாகுடாஓயா, திசமாராம வழியாக. 1812

தொகையான தொழிலாளர்களைக் கொண்ட 1000 ஏக்கர் பண்ணைக்குக் 'கன்டீன்' நடத்துவோர்தேவை. விண்ணப்பிக்கவும்;- எச். எம். ஆசீர்வாதம், உபதபாற் கந்தோர், ஊவாகுடா ஓயா, திசமாராம வழியாக. 1813

இப்பொழுது நடைபெறுகிறது

கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை)

பிளாஸா (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

லிடோ (பொறளை)

மொடேர்ன் (பதுளை)

எம்.ஜி.ஆர். சரோஜாதேவி



மற்றும் பலர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

படகோட்டி

இலங்கை

தி. மு. க.

அரசியல் கட்சி

கொழும்பு, செவ்வாய்

இலங்கை திராவிடமுன்னேற்றக்கழகம் இவ்வாண்டு முதல் அரசியல் கட்சியாக மாறவிருக்கிறது. இவ்வளவு காலமும் இது சமூக சீர்திருத்த இயக்கமாகவும் கலாச்சார இயக்கமாகவும்ம இயங்கி வந்தது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெறுவதற்கு திராவிட முன்னேற்றக்கழகம் தயாராயிருப்பதாகவும் இதற்கு மக்களின் ஆதரவு வேண்டுமென்றும், திரு. ஏ. இளஞ்செழியன் நேற்று கொழும்பிலுள்ள வி. க. பாடசாலையில் நடந்த வருடாந்தக் கூட்டத்தில் கூறினார்.

புதுவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

காரியதரிசி: திரு. ஏ இளஞ்செழியன், உதவிக் காரியதரிசிகள்: திரு. இளவழுதி, திரு. தேவதாசன், திரு. ஏ. விசாகமூர்த்தி, நிதிக்காரியதரிசி: திரு. ஜே. எஸ். சுந்தரம்.

கல்வி

ஜி. சி. ஈ. கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்குநூறு வீதம் சித்தியடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் / 179 பிரதானவீதி, முள்ளியவளை / வவுனியா / மன்னார், வாளைச்சேனை. 1840

வகுப்புகள்:

க. பொ. த. சாதாரண / உயர்தர தூயகணிதம், உயர்கணிதம், பிரயோக கணிதம், இரசாயனம், பௌதிகவியல் உயிரியல் தமிழ் / ஆங்கிலம் அனுபவமுள்ள லண்டன், இலங்கை பட்டதாரிகளால் இருபாலாருக்கும் கற்பிக்கப்படுகின்றன. விடுதி வசதி உண்டு. பார்வையிட்டு விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1838

ஜி. சி. ஈ. உயர்தரம் கலை / வர்த்தகம் விசேட பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் / 179 பிரதானவீதி, கல்முனை. 1842

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சி

6வது வாரம்!

எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த

காவல்காரன்

REGAL JAFFNA

Daily at

4-45, & 7-00, 9-45 p.m.

Lex Barker & Karin Dor

in

THE TREASURE OF SILVER LAKE

MANOHARA

JAFFNA

Daily at 4-45, 7-00, 9-45 P.M

Poya days 10-30 A. M.

JamesStewart-MaureerOhara

in

THE RARE BREED

ஜீப் மோதி குழந்தை மரணம்:

சாரதி பொலிஸ் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம், புதன்

'லாண்ட்றோவர் ஜீப்' வண்டி ஒன்றினால் மோதப்பட்ட 6 வயதுக் குழந்தை ஒன்று துடிதுடித்து மரணமானது. இப்பரிதாப சம்பவம் நேற்றிரவு மிருசுவிலில் நடைபெற்றது.

கொடிகாமம் வீதியில் நடைபெற்ற இவ்விபத்தில் அந்தோனிப்பிள்ளை மரிஸ்ரெலா என்ற 6 வயது பள்ளிக்கூடச் சிறுமி மரணமானார். இதுசம்பந்தமாக மோதிய 'லாண்ட்றோவர் ஜீப்' வண்டியின்சாரதியானஇரத்தினசிங்கம் என்பவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

(கா. நி.)

திருக்கேதீச்சரத்தில்

மகாசிவராத்திரி

கொழும்பு, செவ்வாய்

பெப்ரவரி மாதம் 26-ந் திகதி திங்கட்கிழமை வழமைபோலத் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விழாவை விமரிசையாகக் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கதாப்பிரசங்கம், புராண படனம், திருமுறைஓதல், கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு என்பன இசை நிகழ்ச்சியில் முக்கிய இடம் பெறும். இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வித்துவான்கள் முக்கியமாக திருமுறைகளையே ஓதவேண்டுமெனத் திருப்பணிச் சபையார் முடிவு செய்துள்ளனர்.

விளம்பரம்

குமாஸ்தா/ விற்பனையாளர்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தில் குமாஸ்தா/ விற்பனையாளர் சேவைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பம் செய்பவர்கள் வயது 35—50-க்கு இடைப்பட்டவர்களாகவும் கல்விப் பொதுத் தராதரத்துடன் கூட்டுறவுப் பயிற்சியும் பிடவை வியாபாரத்தில் அனுபவமும் உடையவர்களாக இருக்கவேண்டும்.

சம்பளம் வாழ்க்கைப்படி உட்பட ரூபா 100/-

விண்ணப்பம் 10-2-68க்கிடையில் எனக்குக்கிடைக்க வேண்டும்.

காரியதரிசி.

ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை. 427

லோங்ஸ் பொறியியல் என்ஜினியரிங் கழகம்

லண்டன் சிட்டி அன்ட் கில்ட்ஸ் கழகத்தின் பின்வரும் வகுப்புகளுக்கு மாணவர்களை தயார் செய்யும்.

1. மின்சார என்ஜினியரிங் நடைமுறை (ஆரம்பம்)
2. மின்சார என்ஜினியரிங் நடைமுறை (நடுத்தர)
3. மோட்டார் வாகன மெக்கானிக் வேலை
4. மோட்டார் வாகன மின்சார வேலை.
5. மோட்டார் வாகன பொறியியலாளர் தராதரப் பத்திரம்.
6. மோட்டார் வாகன பொறியியல் வேலையும் இதர பொறியியல் வகுப்புகளும்.
7. தந்திப் போக்குவரத்து முறைகள்.

அனுமதிக்கு ஆகக் குறைந்த தராதரம்:-

(அ) ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணக்கியலிலும் சித்தி

அல்லது

(ஆ) ஆங்கிலத்தில் பாடம் படிக்கும் ஆற்றலுடன் கணக்கியலில் சிரேஷ்ட அறிவும்.

தமிழ் கனிஷ்ட பொறியியலாளர் வகுப்பு:- அனுமதி தராதரம் - ஜே. எஸ். சி.

வகுப்புகள் - 1968, பெப்ரவரி 1-ம் திகதி ஆரம்பம்.

அனுமதிப் படிவங்கள் பின்கண்டவரிடம் பெறலாம்.

அதிபர், லைட்,
425 பாங்ஷோல் வீதி, யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திரம்

நகரசபை, பருத்தித்துறை

1968-ம் ஆண்டுக்கு தேவைப்படும் பொருட்களுக்கான 'சீல்' முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்கள் 1968ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி பகல் பன்னிரண்டு மணி வரை பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் படிவங்களை இக்கந்தோரில் 12-2-68 பிற்பகல் 2-00 மணிவரை காசு கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். மேற்கொண்டு விபரங்களை கீழ் கைச்சாத்திட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விஷயம்	கட்டுப்பணம்	படிவக்கட்டணம்
1. மின்சாரப்பொருட்கள் கொடுத்தல்	ரூ. 250-00	ரூ. 25-00
2. எழுதுபொருட்கள், அச்சடித்த பிரசுரங்கள் முதலியன கொடுத்தல்	ரூ. 50-00	ரூ. 10-00
3. சுகாதாரபொதுவேலைப் பகுதிகளுக்கு பொருட்கள் கொடுத்தல்	ரூ. 50-00	ரூ. 10-00

நகரசபைக் கந்தோர்,
பருத்தித்துறை,
27-1-68.

ஒப்பம்
தலைவர், நகரசபை,
பருத்தித்துறை
428.

ஊடுருவல் அதிகரிக்காவிடில் குண்டுவீச்சை நிறுத்துமாம்

அமெரிக்க அதிகாரி விளக்கம்

வாஷிங்டன், ஜன. 30

தென்வியட்னுமுக்குள் ஊடுருவல் செய்வதை மேலும் அதிகரிக்காமல் வடவியட்னும் இருந்தால் வடவியட்னும்மீது குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்தத்தயாரராக இருப்பதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் திரு. கிளிபோர்ட் தெரிவித்த கருத்துப்பற்றி விளக்கம் கூறுகையிலேயே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடகொரியாவின் கருத்தையும் கேட்கயோசனை

பந்தோபஸ்து சபைக்கு அழைக்க ரஷ்யா கருத்து

நியூயோர்க், ஜன.30

வடகொரியாவைப்பற்றிய அமெரிக்க வேவுக்கப்பலான 'பியூப்லோ'வை மீட்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து பல வழிகளிலும் தீவிர முயற்சிசெய்துவருகிறது.

பியூப்லோவிவகாரம்பற்றி ஆராய்ந்த ஐ. நா. பந்தோபஸ்துசபை இரண்டுதடவை கூடியபின் ஒத்திவைக்கப்பட்டது. இன்று மீண்டும் கூடவிருந்த சபைக் கூட்டத்தை அதன் தலைவர் மீண்டும் ஒத்திவைத்திருக்கிறார். அங்கத்தவர்கள் தனிப்பட்ட முறையில் தொடர்ந்து ஆலோசனை செய்வதற்கு வசதியாக சபை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

பந்தோபஸ்துசபைக் கூட்டத்துக்கு வடகொரியாவையும் அழைத்து அதன் கருத்தையும் கேட்கவேண்டும் என்று சோவியத் பிரதிநிதி கருத்துத்தெரிவித்திருப்பதாகவும் இதை ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் பலரும் ஆதரிப்பதாகவும் அறியப்படுகிறது.

நிபந்தனையெதுவும் விதிக்கப்படாவிட்டால் வடகொரியா பந்தோபஸ்துச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் என்று சோவியத் யூனியன் கருதுகிறதாம்.

பந்தோபஸ்துச்சபைப் பிரதிநிதிகள் தனிப்பட்டமுறையில் ஆலோசனை நடத்திவரும் அதேசமயம் தென்கொரியாவில் அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்கள் நிலைகொள்கின்றன.

காந்தி மகாத்மாவுக்கு இந்திய மக்கள் அஞ்சலி

புதுடில்லி, ஜன. 30

மகாத்மா காந்தி அமரத்துவமடைந்த இருபதாவதாண்டு நினைவு தினமும், தியாகிகள் தினமும் இன்று இந்திய நாடுமுழுவதிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இன்று காலையில் காந்திஜி சமாதியுள்ள ராஜ்காட்டில் பிரார்த்தனையும் நூல் நூற்பு இயக்கமும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஸாகிர் ஹுசெயின், உப தலைவர் திரு. வி. வி. கிரி, பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

காந்திஜி கொலை செய்யப்பட்ட பிர்ளா மாளிகையிலும் இன்று காலை பிரார்த்தனை நடைபெற்றது.

முற்பகல் 11 மணிக்குநாடு முழுவதிலும் இரண்டு நிமிட நேரம தியாகிகளுக்கு மௌன அஞ்சலிசெலுத்தப்பட்டது. வாகனப் போக்குவரத்துகள் காரியாலய அலுவல்கள் யாவும் இரண்டு நிமிஷம் நிறுத்தப்பட்டன.

பரீட்சார்த்திகளுக்கு பிரவேசப்பத்திரம்

புலோலி, செவ்வாய்

செய்முறைப் பரீட்சையொன்றில் தோற்றவிருக்கும் இப்பகுதிப் பரீட்சார்த்திகளுக்கு சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமான பிரவேசப்பத்திரம் கிடைத்துள்ளது

1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ ஸி.ஈ பரீட்சைக்கான உலோக வேலை பாடத்தின் செய்கைமுறை பரீட்சை இம் மாதம் 31-ம் திகதியும் பெப்ரவரி 1-ம் திகதியும் நடைபெறவிருக்கிறது.

இதற்கான பிரவேசப்பத்திரம் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இப்பாடத்தை இப்பரீட்சார்த்திகள் தமிழில் எடுக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

டிட்டோ- செலாசி ஆலோசனை

அடிஸ்அபாபா, ஜன. 30

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல்டிட்டோ எதியோப்பியமன்னர் ஹெய்லிசெலாசியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மேற்கு ஆசியநிலைமை, வியட்நாம் பிரச்னை ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தியதாக அறியப்படுகிறது.

வடமராட்சி

விவசாயிகள் கஷ்டம்

புலோலி, செவ்வாய்

வடமராட்சி மக்களிடையே பெரும் கவலை தலைதூக்கியுள்ளது. இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான நீரிறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையங்களில் எடுக்க இயலாது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதே இவர்கள் கவலைக்குக் காரணம். இதனால் வடமராட்சி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போதியளவு நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள் கடைகளில் இல்லாததைத்தொடர்ந்து நீர் இறைக்கும் இயந்திரங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கூலியும் அதிகரித்துள்ளது. இதனால் பழைய முறைப்படி துலாமுறையைக்கொண்டும நீர் இறைக்க விவசாயிகள் ஆரம்பித்திருக்கிறார்கள்.

நாடு திரும்பினர்

டெஹ்ரான், ஜன 30

மலேசியாவுக்கு விஜயம் செய்திருந்த ஈரான் மன்னர் ஷாவும் ராணி பாராவும் நாடு திரும்பினர்.

திருமதி சாஸ்திரி- கொஸிஜின் சந்திப்பு

புதுடில்லி, ஜன.30

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் நேற்று மாலை திரு. லால்பகதூர் சாஸ்திரியின் இல்லத்துக்குச் சென்று திருமதி லலிதாசாஸ்திரியைச் சந்தித்தார் திரு. கொஸிஜினுடன் அவரது புதல்வியும் சென்றிருந்தார்.

திரு. லால்பகதூர் சாஸ்திரியின் முழு உருவ படமொன்றை திரு. கொஸிஜினுக்கு திருமதி சாஸ்திரி அன்பளிப்பாக கொடுத்தார். கொஸிஜின் மகளுக்கு திருமதி சாஸ்திரி ஒரு சேலையையும் அன்பளிப்பாக வழங்கினர்.

தாமதத்தால் கஷ்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

"தினமும் காலையில் பருத்தித்துறையிலிருந்து அல்வாய், தொண்டமனுறு பாதையால் செல்லும் பாடசாலை மாணவர்களின் வசதிக்காக விடப்படும் இ. போ. ச. பஸ் தாமதித்து வருவதினால் மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

இப்பாடசாலை சேவை பஸ் தினமும் காலை 8-15 மணிக்கு அல்வாயில் பாடசாலைகளுக்குச் செல்லக் காத்து நிற்கும் மாணவர்களையும், மாணவிகளையும் ஏற்றிச்செல்வது வழக்கம் ஆனால் மாணவர்களின் வசதிக்காக விடப்படும் இந்த பஸ் இவ்வருடம் முதல் மிகவும் தாமதித்தே வருவதால் உடுப்பிட்டியில் உள்ள கல்லூரிக்குச் செல்லக் காத்து நிற்கும் மாணவர்கள் பலர் ஏமாற்றமடைந்து நேரம் சென்றுவிட்டதால் வீடு திரும்பவேண்டி நேரிடுவதாகத் தெரிகிறது.

மாணவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைகளுக்குச் சென்றடைய ஆவன செய்து ஒழுங்குகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் உடனடியாகத் தகுந்த நேர அட்டவணை தயாரித்து இப்பகுதி மாணவர்களுக்கு விமோசனம் அளிக்கவேண்டும்" என்றும் கோரும் மகஜரொன்றை அல்வாய் வாலிபர் முன்னேற்றக்கழகச் செயலாளர் திரு சதாநடேசன் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ மனேஜருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இளைஞரின் அக்கறை

சாவகச்சேரி, செவ்

மட்டுவில்தெற்கு விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமது கழக வளர்ச்சிக்கு நிதி சேர்க்கும் முகமாக கடந்த 27, 28ம் திகதிகளில் தமது பகுதி வயல்களில் அறுவடைவேலைகளில் ஈடுபட்டனர்.

இதன்மூலம் இவர்கள் பெற்ற அறுவடைக் கூலிப் பணத்தை [illegible]

அடுத்தமாதம் அண்ணு இலங்கை வரலாம்

சென்னை, ஜன.30

தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை அடுத்த மாதம் இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக தெரியவருகிறது.

தமிழக சட்டசபையில் வரவுசெலவு திட்டம் அடுத்த மாதம் நிறைவேற்றப்பட்ட பின்னர் திரு. அண்ணுதுரை இலங்கைக்கு வருவாரென அறியப்படுகிறது.

இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து இந்தியா செல்லும் இந்தியர்களுக்கான புனர்வாழ்வு திட்டம் பற்றி இலங்கை பிரதமர் டட்லி சேனநாயக்காவுடனும் மற்றும் அதிகாரிகளுடனும் திரு. அண்ணுதுரை பேச்சுவார்த்தை நடத்துவார் என அறியப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரியவருகிறது.

இலங்கைவரும் திரு. அண்ணுதுரை யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, கண்டி, ஆகிய இடங்களுக்கு செல்வாரென அறியப்படுகிறது.

வடமராட்சியில் மலேரியாபயம்

புலோலி. செவ்வாய்

வடமராட்சியில்மலேரியா நோய் இருப்பதாக சுகாதாரப்பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

துன்னாலை தெற்கில் வசிக்கும் ஒருவருக்கு இந்த மலேரியா நோய் பீடித்திருக்கிறது.

இது சம்பந்தமாக மலேரியா தடுப்புப்பகுதியினர், மேற்படி நோயாளியையாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மிக்க பாதுகாப்பாக வைத்திருப்பதாக அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாகஇப்பகுதி மலேரியா தடுப்புப்பகுதியை சேர்ந்துள்ளவர்கள்கொழும்பிலுள்ள மலேரியா தடைப்பகுதியினருக்கு அறிவித்துள்ளனராம்.

மலேரியா இப்பகுதியில் பரவக்கூடும் என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வடமராட்சியில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை சுகாதாரப்பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

வடபகுதிப் பாடசாலைகளில்

ஆசிரியர் பற்றுக்குறையால் மாணவர் கல்வி பாதிப்பு

புலோலி, செவ்வாய்

வடபகுதி பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றுக்குறை தோற்றியுள்ளது. இதன் காரணமாக பல பாடசாலைகளிலும் இன்னமும் நேரசூசிகள் தயாரிக்கப்படவில்லையாம். இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பலர் அவ்வப்பகுதிகளுக்குச் செல்லாமல் இடமாற்றத்தை ரத்துச்செய்யும் நோக்கத்துடன் ஈடுபட்டிருப்பதாகவும் ஆசிரியர் தட்டுப்பாட்டுக்கு இதுவுமொரு காரணமெனவும் அறியப்படுகிறது. குறித்த பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்கள் போதியளவு இல்லாததால் தலைமை ஆசிரியர்கள் நேரசூசிகள் தயாரிக்க முடியாமல் கஷ்டமடைகிறார்களாம், இது குறித்துத் தலைமையாசிரியர்கள் மேலிடத்திற்குப் புகார் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

குடத்தனை, நாகர்கோவில் செம்பியன்பற்று ஆகியபகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தலைமை ஆசியர்கள் பற்றுக்குறையாயுள்ளதாகவும், கல்வி இலாகாவால் அனுப்பப்பட்ட பல தலைமை ஆசிரியர்கள் இன்னமும் குறித்த பாடசாலைகளுக்குச் செல்லவில்லையெனவும் தெரியவருகிறது.

"பண்களை மரபின்படி இசைத்துப்பாட வேண்டும்"

சுழிபுரம், திங்கள்

"பண்டைய மரபின்படி பண்களை இசைத்துப் பாட வேண்டும். அப்போதுதான் பக்தி மேம்படும். அதன் பொருள் நன்கு புலப்படும். தமிழகத்தில் மறைந்திருந்த தேவார திருமுறைகளை நல்நிலைப்படுத்தி எல்லோரும் ஓதுவார்கள்மூலம் ஓத வைத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவரையே சாரும்" என்று மெய்கண்டாராதீன வித்துவான் திரு. பி.ஏ எஸ். இராசசேகரன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தேவாரத் திருமுறைப் பண் வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. எம். ஏ. கந்தையா தலைமை வகித்தார்.

திரு எஸ். இராசசேகரன் தொடர்ந்து பேசுகையில், நாயன்மார்கள் தேவாரதிருவாசகங்களைப் பாடும்போது தமிழையும் இசையையும் கலந்து பாடி இறைவனை வணங்கி அவனடி சேர்ந்தனர். தேவாரம் என்னும்போது அப்பரடிகள் பாடியவையே தேவாரமாகும். மற்றவை தேவாரம் என்ற கட்டுக்கோப்புக்குள் பட்டவையேயாகும். சில தேவாரங்களின் பண் என்ன என்பதைக் கண்டுபிடிப்பதில் அண்ணாமலை இசைமன்றத்தினர் பெரும் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். அதன் முடிவுகள் வெளியாகவில்லை நாம் பண்டைய மரபின்படி தேவார திருமுறைகளைப் பாட வேண்டும். அதன் பேருக நன்மையடையலாம்.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் பேசுகையில், "மனிதனின் ஆத்மீக முன்னேற்றத்துக்கு சமயம் அவசியமாகும். ஆத்மீக லாபத்தைப் பெற தேவார திருவாசகத்தைப் பருக வேண்டும்." அகில இலங்கை இந்துசமய ஆலோசனைச் சபைச் செயலாளர் திரு. கி. நவரத்தினம் பேசுகையில் ஓர் இந்துவை எப்படி உருவாக்க வேண்டும் என்பதே எமது நோக்காகும் என்றார்.

மணிவாக்கு

நாடு நல்ல கல்வி முறையை வளர்ப்பதற்கு, உள்ளத்தூய்மை இன்றியமையாத ஓர் அம்சமாகும்.
—மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹு தை மீ 17உ (31-1-68)

ஏற்றத்தாழ்வு

இருப்பவனுக்கும் இல்லாதவனுக்குமிடையிலுள்ள இடைவெளி நிரப்பப்பட வேண்டும். தனி மனிதன் விஷயமாயினும் நாடுகள் சம்பந்தப்பட்டதாயினும் இந்த இடைவெளி நிரப்பப்பட்டால் போட்டிகளும் பொருமைகளும் அச்சமும் அவநம்பிக்கையும் நீங்கும்; அமைதியும்சுபீட்சமும் ஏற்படும்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது அணுகுண்டு வீச்சுக்கு உள்ளான ஜப்பான் கடும் உழைப்பினுல் மிகக் குறுகிய காலத்தில் துரித வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆசியாவிலேயே முன்னேற்றமடைந்துள்ள ஒரேயொரு நாடுஜப்பான் தான். ஜப்பான் தனது வளர்ச்சியைத்தான் கவனித்துக் கொண்டதே தவிர, யுத்தத்தினுல் பாதிக்கப்பட்ட இதர ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்கு அது உதவி புரியவில்லை என்று, தாய்லாந்து பாங்கொக் வங்கி குற்றம் சுமத்துகிறது. இல்லாதவன் இருப்பவன்மீது கொள்ளும் பொருமையா?

அமெரிக்காவை குபேர நாடு என அழைப்பதுண்டு. அங்கேயும் இப்பொழுது பொருளாதார நெருக்கடி ஆரம்பிக்கிறது. செல்வம் கொழிக்கும் அமெரிக்கா உலகில் அபிவிருத்தி குறைந்த, அபிவிருத்தியடையாத நாடுகளுக்குப் பல வழிகளிலும் உதவியளித்து வருவது உண்மையே. ஆயினும் தனது நலனைக் கருதியும் வல்லரசு முகாமினை உருவாக்கும் நோக்கத்துடனுமே அது உதவியளிக்கிறதென்ற கருத்தில் உண்மையில்லை என்று சொல்லிவிட முடியாது. உதவி செய்பவன் தனது நலனைக் கருதாமல் உதவி செய்வான் என்று எதிர்பார்க்கவும் முடியாது. அமெரிக்காவானுலும் வேறு எந்த நாடானுலும் சரி தனது நலன் கருதாமல் உதவி செய்யமாட்டாது; இதுவரை செய்யவுமில்லை. தமது உற்பத்திப் பொருள்களையே இந்த நாடுகள் பெரும்பாலும் 'உதவி'யாக வட்டிக்கு வழங்குகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாடுகளிலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வெளி அரசுகள் உதவி புரிவது மிக மிகக் குறைவு. இதுதவிர சிறிய நாடுகள் தமது உற்பத்திப் பொருள்களை உலக சந்தையில் விற்பனை செய்வதற்கும் பெரிய அரசுகள் இடையூறாக இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. இலங்கைத் தேயிலைக்கும் ரப்பருக்கும் ஏற்படும் விலைவீழ்ச்சி இதற்குச் சான்று. சிறிய நாடுகளின் விளைபொருள்களையும் உற்பத்திப் பொருள்களையும் உலக சந்தையில் இடையூறின்றி விற்பனை செய்யக்கூடிய முறையில் விலைநிர்ணயிக்க ஒரு திட்டம் வகுக்க வேண்டியது அவசியம். அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு அந்தந்த நாட்டிலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதற்கான பொதுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். பெரிய அரசுகள் தாம் வழங்கும் கடன்களையும் உதவிகளையும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்பவும் தமது சொந்த நலனைக் கருதி நிபந்தனைகள் விதித்துக் கொடுப்பதும்தான் உலகில் கோஷ்டி முகாம்கள் ஏற்படவும், தகராறுகள், தொல்லைகள் ஏற்படவும் காரணமாக இருக்கின்றன. எந்த அரசும் தாம் வழங்க முன்வரும் உதவியையும் கடன்களையும் ஐ. நா. ஸ்தாபனம்மூலம் அல்லது உலக நாடுகளைக் கொண்ட ஒரு பொது ஸ்தாபனத்தின்மூலம் வழங்கினுல் கோஷ்டிப் பூசல்கள் தோன்ற இடமிருக்காது. உண்மையான அபிவிருத்திக்கும் உலக அமைதிக்கும் வழி பிறக்கும். நாளை புதுடில்லியில் ஆரம்பமாகும் ஐ. நா. வர்த்தக அபிவிருத்தி இரண்டாவது மகாநாடு இதுபற்றி ஆராய்ந்து நல்ல முடிவு செய்யுமென எதிர்பார்ப்போம்.

சுதந்திர தினக் கொண்டாட்டம்

அளவெட்டி, செவ்வாய்

இலங்கையின் சுதந்திர தினத்தை வலி-வடக்கில் இயல், இசை, நாடகங்களுடன் கொண்டாடுவது என வலி-வடக்கு காரியாதிகாரி காரியாலயத்தில் நடைபெற்ற மகாநாட்டில் தீர்மானிக்கப்பெற்றுள்ளது.

வலி-வடக்குக் காரியாதிகாரி இ. பி. எல். பற்றிக்ஸ் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் சுதந்திர தினமான பெப்ரவரி 4-ம் திகதி காலை சகல ஆலயங்களிலும் விசேட ஆராதனைகளும், பின் யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வலி-வடக்கு காங்கேசன்துறை பகுதி விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஓர் உதைபந்தாட்டப் போட்டி நடாத்துவதெனவும், அதை அடுத்து உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் நாடகம், நடனம் முதலிய கலைநிகழ்ச்சிகள், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை தலைமையில், வலிவடக்குக் காரியாதிகாரி திரு. பி எல். பற்றிக்ஸ்தேசியக்கொடியை ஏற்றிவைக்க, உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. முத்துலிங்கம் விழாவை ஆரம்பித்து வைக்கவும் ஒழுங்கு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழகத்தில்பனம்பொ
பசியைப்போக்கி; பணை

பனைச்செல்வம்

இயற்கைச் செல்வம்

பனைச் செல்வம் இந்த நாட்டில் இயற்கைச் செல்வங்களுள் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது ஆகும். செல்வம்எத்தனையுண்டு. புவிமீது அவையாவும் படைத்த தமிழ்நாடு... என்று கவிக்குயில் பாரதியார் வியந்து போற்றிப்பாராட்டி மகிழ்கின்ற நமது தாய்த்திருநாட்டில் கற்பகத் தருவாகப்பனைமரத்தைச் சிறப்பித்துப் பேசப் பெறுவது பொய்யும் அல்ல, புனைந்துரையும் ஆகாது.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

என்னும் செந்நாப் புலவரின் சிறப்புரைக்கு எடுத்துக்காட்டாக வேர்முதல் நுனிவரை அத்தனை உறுப்புக்களும் சமுதாயத்திற்கே பயன்படுகின்ற பனைமரத்தைக் குறிப்பிடுவதுசாலப் பொருத்தமானதாகும். இத்தகு பனையின் முழுப்பயனையும் நாட்டுமக்கள் நல்ல முறையிலே பயன்படுத்தி மகிழ வேண்டும் என்று விரும்பினுர் திருவள்ளுவர்... அதே நேரத்தில் மதிமயக்கி, மானக்கேடுண்டாக்கி வாழ்வைக் கெடுக்கும் மதுவை எதிர்த்து, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே மதுவிலக்கை வலியுறுத்தி முதற் குரல் எழுப்பினுர்.

திருக்குறளை அருளிய திருவள்ளுர், அந்த வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளை வையகத்திற்குத் தந்து வான்புகழ் கொண்ட நமது தமிழ்த்திரு நாட்டிற்கும் அத்தகு தமிழ் நாட்டிலே பிறந்து வாழுகின்ற நமக்கும் பெருமை தருவதாகும்.

காந்தியடிகள் தொண்டு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், திருவள்ளுவர் தொடங்கிய மதுவிலக்கு கொள்கை, நாட்டில் நடைமுறைக்கு வராமல் ஏட்டளவிலிருந்தது. அவ்வாறு ஏட்டளவிலிருந்து, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டிய அந்த மதுவிலக்குக் கொள்கையை ஒரு மாபெரும்மக்கள்இயக்கமாக்கி, குடியின் கேட்டினை மக்கட் சமுதாயத்திற்குத் தெளிவுற எடுத்துக்காட்டி வலியுறுத்தினுர், உத்தமர்காந்தியடிகள். அதே நேரத்தில், மதுவிலக்குக் கொள்கை அமுல் படுத்தப்படுவதால், அத் தொழிலில் ஈடுபட்டுள்ளன, பல இலட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்கள், பனைத் தொழில் வல்லுனர்களின் வாழ்க்கை பாதிக்க பெறும். சமூகத்தில்அவர்கள் மேலும் பின்தங்க நேரும் என்பதையுணர்ந்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது இன்றியமையாத கடமை என்றும் கருதினுர். பாதிக்கப்பெற்ற பனைத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கான திட்டப்பணிகளை அரசாங்க ஆதரவோடு வளர்க்க வேண்டும் என்றும் விரும்பினுர். அந்த மகானின் பெருவிருப்பம் ஈடேறிய நாள் 1947 டிசம்பர் 23. அந்த நாளில் தான் மத்திய அமைச்சரவையில் உணவு விவசாய அமைச்சராகப்பொறுப்பேற்றிருந்த டாக்டர் இராசேந்திர பிரசாத் பனைத்தொழில் வளர்ச்சி வேலைகளைத் தம்முடைய துறையோடு இணைத்தார். கவனிப்பாரற்றுக் கிடந்த பனைத் தொழிலின் வளர்ச்சிக்கான, பனைத்தொழிலாளர் நல்வாழ்வுக்கான நம்பிக்கை ஒளி தோன்றியது.

இந்தியாவிலுள்ள வற்றாத ஜீவநதிகளாகசெல்வக்களஞ்சியங்களாக விளங்கும் 5 கோடி பனைமரங்களில் 4 கோடி பனைமரங்கள் தமிழகத்தில்தான் உள்ளன. 2 லட்சத்திற்கும் அதிகமான பனைத்தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தோற்றுவாய்

தமிழகத்தைப் பொறுத்தவரை, பனைவெல்ல அபிவிருத்தித்திட்டங்கள் 1949-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் நாள் செயலுக்கு வந்தன. இத்திட்டங்கள் இங்கு கூட்டுறவின் அடிப்படையில் செயல் படுத்தப் பெற்றன. இது அகில இந்தியாவின்கவனத்தையும் கவர்ந்தது.

பின்னர், 1954-ல் அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் குழு உருவாக்கப்பெற்றதும், பனைத்தொழில் வளர்ச்சிப் பொறுப்பு மேற்படி குழுவைச் சார்ந்தது. அதன் பிறகு 1960-ல்மாநில கதர்கிராமக் கைத்தொழில் ஆயம் தோற்றுவிக்கப் பெற்றதும், பனைத்தொழில் கதர் கிராமக் கைத் தொழில் ஆயத்தின் கீழ் வந்தது. அதிலிருந்து, இத்தொழிலின் வளர்ச்சி பலமடங்கு அதிகரித்துள்ளது.

தமிழகமெங்கும் கிராம அடிப்படையில் இயங்கிய ஆரம்பப்பனை வெல்லக்கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் ஒன்றுகூடித் தங்கள் பிரச்னைகளை விவாதிக்கவோ, கலந்து பேசவோ, கோரிக்கைகளை எடுத்துக் கூறவோ, வாய்ப்பில்லாதிருந்தது இந்தக்குறையைப் போக்குவதற்கும், மாநிலம் முழுதும் பனைத் தொழில் வளர்ச்சித் திட்டங்களை ஏற்று நடத்துவதற்கும், 1957 அக்டோபர் 21-ம் நாள் சென்னை மாநில பனை வெல்லக் கூட்டுறவுப்பேரமைப்பு பதிவு செய்யப்பெற்று, 1958 ஜனவரித் திங்கள் முதல் செயல்படத் தொடங்கியது. கதர் ஆயத்திலிருந்து நிதியுதவி பெற்று மாவட்ட சம்மேளனங்களுக்கும், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குவது பெற்றகடனை கதிர் ஆயத்திற்குத் திருப்பிச் செலுத்துதல், மாவட்ட சம்மேளனங்கள் இல்லாத மாவட்டங்களில் நேரடியாகத் தொழில் அபிவிருத்திவேலைகளை ஏற்று நடத்தல் ஆகியன இப்பேரமைப்பின் பணிகளாகும். ஊழியர்களுக்குப் பயிற்சிகொடுத்துத்தொழில் நுணுக்க ஆலோசனை கூறுவது, உற்பத்திப் பொருள்களை விற்றுத்தருவதுடன், பிறமாநிலங்களோடு வியாபாரம் செய்வது, தமிழகத்தின் தலைநகரிலும், வேறு பல முக்கிய நகரங்களிலும் பதநீர்க்கடைகள் நடத்துவது ஆகியவை மூலம், இத்தொழிலை விரிவாகப் பரப்ப இது வழிவகுக்கிறது. சீனி ஆலைகள், பிரஷ் தொழிற்கூடங்கள் போன்ற உற்பத்தித் திட்டங்களை ஏற்று நடத்துவதும், தமிழகமெங்

கும் தும்பு கொள்
செய்து, அயல்நாடு
ஏற்றுமதி செய்வதும்,
ம்பரங்கள் செய்வதுப்
டுறவுச் சங்கங்களின்
டங்களை ஏற்று
வதில் ஏற்படுகிற
களை அரசாங்கத்துக்
துக்கூறிப் பிரச்னைகளை
க்க ஆவன செய்வதுப்
தப் பேரமைப்பின் ம
பணிகளாகும். இன்று
மெங்கும் கிராம அடி
யில் 1,500 ஆரம்ப
வெல்லக் கூட்டுறவு
சங்களும், 7 மா
கூட்டுறவுப் பேர
களும் இயங்குகின்றன

உதவிகள்

கதர் கிராமக்
தொழில் குழுவும்,
கதர் ஆயமும்
தோறும் நிதியுதவி
இன்றன. அதி 1
ருந்து 1966-67
சுமார் 63 லட்சம்
மானியமாகவும்,
241 லட்ச ரூபாய்
வும் வழங்கியுள்ளது
இன்று தமிழகத்தி
வெல்லம் தயாரி
தும்பு சேகரித்தல்,
சேகரித்தல், பனஞ்சி
ரித்தல், பனங்க
தயாரித்தல், பல்வே
நார்ப் பொருள்க
பத்தி செய்தல் என்
யில் பனைத்தொழி
துறையினும் செ
கிளைத்து வளர்ந்து
கிறது
தமிழகத்தில்
தோறும், ஏறத்தாழ
ரூபாய் மதிப்புள்ள
வெல்லமும், 1
ரூபாய் மதிப்புள்ள
தும்பும், 10 லட்சம்
மதிப்புள்ள பதநீரு
லட்ச ரூபாய்மதிப்பு
ரபனைப் பொருள்க
பத்தி செய்யப்
கூட்டுறவு சங்
மூலம் விற்பனை
படுகின்றன.

பனந்தும்பு

நமது நாட்
பொறுத்தவரை
பவர் பனந்தும்பை
வாகவே கருதி
இன்று அந்நிலை
மாறி, அந்நிய
யைத் தேடித்
பொன்னுக்கு
பொருளாகக் கரு
ஏற்பட்டிருக்கிறது
மப் பொருளா

படித்தவர்களும் ப
ஆராய்ச்சியில் ஈடு

— திரு. எம். முத்து

(தமிழக உள்ளாட்சித்துறை

ஒரு பனம்பழத்துக்குக்கூட சன்
மென்றும் பனை உற்பத்தியில் கவனம் செ
களுக்கு முன் டாக்டர் கனகரத்தினம் தெ
பக்கத்தில் வெளியிட்டிருந்தோம். பனம்
யம் ஒன்று வடபகுதியில் நிறுவப்படவே
எம். பி. திரு. க. துரைரத்தினம் கொண்டு
நிதிகள் சபையில் நிறைவேறி பல மாதா
நாட்டில் பனைமரங்கள் எவ்விதம் சிறந்த
பனம்பொருள் உற்பத்தி எப்படி நடைபெ
ழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு
தில் வானொலியில் நிகழ்த்திய உரையில்
உரையிலிருந்து நமது நாட்டுக்கும் மக்களு
கூடிய நல்ல யோசனைகளை இங்கே தருகிறே

இன்றைய பலன்

[31-1-68]

புதன்கிழமை

[தை மீ 17 வ]

நட்சத்திரம்- அவிட்டம் பகல் 1-16 மேல் சதயம்.

திதி- துதியை. இரவு 10-15 மேல் திருதியை.

சுபநேரம் - 5-06—6-36.

ராகுகாலம்- 12-36—2-06.

இன்று பிறந்தவர்களுக்கு! சிறிது சிக்கலான ஆண்டு இது இனபந்துக்களின் விரோதத்தைச் சம்பாதிக்க நேரிடும். கடமையில் விழிப்புடன் இருப்பின் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை தேக ஆரோக்கியம் நன்முக இருக்கும்.

மேஷம்- ஏமாற்றமுண்டு, விழிப்புடன் இரு.

ரிஷபம்- அன்னையின் ஆணை அமைதிக்கு வழி.

மிதுனம்- நல்ல திருப்பம் நலன்கள் பெருகும்.

கடகம்- அடுத்துக் கெடுப்பர் அவசரம் வேண்டாம்.

சிம்மம்- அன்பு வலை, ஆனந்த நிலை.

கன்னி- பின்னணியில் பிளவு, முன்னணியில் நிறுகாதே

துலாம்- பொது நல விருப்பம், புகழும் சேரும்

விருச்சிகம்- அதிகாரியின் ஆதரவு, அறவழி நாட்டம்.

தனுசு- ஆற்றலுக்கு மதிப்பு, ஆதாயமுண்டு.

மகரம்- வழக்கு விவகாரம். வரவும் தடைப்படும்

கும்பம்- துன்பத்தின் நிழலாட்டம், சோர்வு மிகுதி.

மீனம்- விளைபொருவரவு, வியாபார விருத்தி

— சோதிடக்கலாநிதி —

ம்பொருள் உற்பத்தி பணமும் தருகிறது

களும் பனம்பொருள் யில் ஈடுபடுகின்றனர்

ரு. எம். முத்துசாமி —

ழக உள்ளாட்சித்துறை அமைச்சர்)

பழத்துக்குக்கூட சண்டைபோடும் காலம் வரலா
ற்பத்தியில் கவனம் செலுத்துமாறும் சில தினங்
டர் கனகரத்தினம் தெரிவித்த கருத்தை இதே
பிட்டிருந்தோம். பனம்பொருள் ஆராய்ச்சி நிலை
ததியில் நிறுவப்படவேண்டுமென பருத்தித்துறை
ரைரத்தினம் கொண்டுவந்த தீர்மானம் ஜனப்பிர
நிறைவேறி பல மாதங்களாகி விட்டன. தமிழ்
கள் எவ்விதம் சிறந்த பயன் தருகின்றன. அங்கு
பத்தி எப்படி நடைபெறுகின்றது என்பதை தமி
றை அமைச்சர் திரு. எம். முத்துசாமி சமீபத்
நிகழ்த்திய உரையில் தெரிவித்திருந்தார். அவரது
து நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் பயன் தரக்
னைகளை இங்கே தருகிறோம்.

கும் தும்பு கொள்முதல் செய்து, அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், விளம்பரங்கள் செய்வதும், கூட்டுறவுச் சங்கங்களின் திட்டங்களை ஏற்று நடத்துவதில் ஏற்படுகிற சிரமங்களை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறிப் பிரச்னைகளைத் தீர்க்க ஆவன செய்வதும் இந்தப் பேரமைப்பின் மற்றைய பணிகளாகும். இன்று தமிழகமெங்கும் கிராம அடிப்படையில் 1,500 ஆரம்ப பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், 7 மாவட்டக் கூட்டுறவுப் பேரமைப்புகளும் இயங்குகின்றன.

உதவிகள்

கதர் கிராமக் கைத்தொழில் குழுவும், தமிழக கதர் ஆயமும் ஆண்டுதோறும் நிதியுதவி வழங்குகின்றன. அது 1958-59 லிருந்து 1966-67 வரை சுமார் 63 லட்சம் ரூபாய் மானியமாகவும், சுமார் 241 லட்ச ரூபாய் கடனாகவும் வழங்கியுள்ளது.

இன்று தமிழகத்தில் பனைவெல்லம் தயாரித்தல், தும்பு சேகரித்தல், பதநீர் சேகரித்தல், பனஞ்சீனி தயாரித்தல், பனங்கற்கண்டு தயாரித்தல், பல்வேறு ஓலை, நார்ப் பொருள்களை உற்பத்தி செய்தல் என்ற முறையில் பனைத்தொழில் பல துறையினும் செழித்துக் கிளைத்து வளர்ந்து வருகிறது.

தமிழகத்தில் ஆண்டுதோறும், ஏறத்தாழ 6 லட்ச ரூபாய் மதிப்புள்ள பனைவெல்லமும், 1 கோடி ரூபாய் மதிப்புள்ள பனந்தும்பும், 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பதநீரும், 3,75 லட்ச ரூபாய்மதிப்புள்ள இதர பனைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பெற்று கூட்டுறவு சங்கங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

பனந்தும்பு

நமது நாட்டைப் பொறுத்தவரை நம்மில் பலர் பனந்தும்பைத் தாழ்வாகவே கருதி வந்தனர். இன்று அந்நிலை அடியோடு மாறி, அந்நிய செலவாணியைத் தேடித் தருகிற பொன்னுக்கு ஒப்பான பொருளாகக் கருதும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ''கிராமப் பொருளாதாரத்தின் தந்தை'' டாக்டர் ஜே. ஸி. குமரப்பா அவர்கள் கூறிய வண்ணம், கழிவுப் பொருள் நமக்குக் கட்டித் தங்கத்தைத் தருகிறது. தமிழகம் ஏறத்தாள 50 மேலைநாடுகளுக்குத் தும்பு ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியைக் கொண்டுவந்து குவிக்கிறது. பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பதநீர் ஒய்ந்த 6 மாத காலத்தில் தும்பு சேகரிப்பதில் ஈடுபடுகிறார்கள். இதனால் அவர்களுக்கும் ஆண்டு முழுதும் வேலை கிடைக்கிறது நல்ல கூலியும் கிடைக்கிறது.

பதநீர் விற்பனை

எல்லா மாவட்டங்களிலும் பதநீர் விற்க தமிழக அரசு அனுமதித்துள்ளது. நவீன முறையில் பதநீர் சுத்தமாக சேகரிக்கப்பெற்று, குளிர்ப்பதன இயந்திரங்களின் உதவியால் குளிர்விக்கப்பட்டு, அல்கத்தின் புட்டிகளில் அடைக்கப்பெற்று எங்கும் விற்பனை செய்யப்பெறுகிறது. கடந்த ஆண்டு பதநீர்ப் பருவத்தில் சென்னை நகரில் மட்டும் ஒரு லட்சத்து அறுபத்தேழாயிரம் ரூபாய்க்கு பதநீர் விற்பனை செய்யப்பெற்றுள்ளது.

சென்னையை அடுத்த மாதவரம் குமரப்பாபுரத்திற்கு ஒரு பனஞ்சீனி ஆலையும், கன்யாகுமாரி மாவட்டத்தைச் சேர்ந்த பரக்குன்னுவில் ஒரு பனஞ்சீனி ஆலையும் இயங்கி வருகின்றன. செங்கற்பட்டு மாவட்டம் கடப்பாக்கத்தில் கட்டி முடிக்கப்பெற்றுள்ள பனஞ்சீனி ஆலை, பதநீர்ப் பருவத்தில் உற்பத்தியைத் துவக்கும். மற்றும் நெல்லை, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் பனஞ்சீனி ஆலைகள் நிறுவப்பெறுவதற்கான பூர்வாங்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநில ரீதியில் குமரப்பாபுரத்தில் ஒரு பனைத் தொழிற் பேட்டையும் கடலூரில் ஒரு பனைத் தொழிற் பயிற்சி நிலையமும், திருச்செந்தூரில் ஒரு பெரிய பனங்கற்கண்டு ஆராய்ச்சி நிலையமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதே வகையில் மதுரை மாவட்டம் வத்தலக்குண்டில் ஒரு பழப்பக்குவ நிலையமும், குளச்சல், தூத்துக்குடி ஆகிய இடங்களில் தும்பு ஏற்றுமதி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. குமரப்பாபுரத்தில் இயங்கும் பனைத் தொழிற்பேட்டையைப்போல் இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிப் புத்தூரில் மிகப்பெரும் அளவில் ஒரு பனைத் தொழிற்பேட்டை நிறுவுவதற்கான பூர்வாங்க வேலைகள் செய்யப்பெற்று வருகின்றன. இப்படி உருவாகும் பனைத் தொழிற் பேட்டைகளின் மூலம் பனைப்பொருள் உற்பத்தி பெருகுவதோடு, ஏராளமான பனைத்தொழில் வல்லுனர்களுக்கும், தொழில் நுணுக்கர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

இன்று 4 கோடி பனை மரங்கள் உள்ள தமிழகத்தில் 40 லட்சம் மரங்களே சீவப்படுகின்றன. எஞ்சியுள்ள மரங்களைச் சீவுவதற்குப் போதிய பனைத்தொழில் வல்லுனர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது.

படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி

எனவே, படித்த இளைஞர்களையும் படித்து வேலையில்லாதிருக்கும் இளைஞர்களையும் இதில் ஈடுபடுத்துவதற்கான திட்டமொன்றை உருவாக்கி அதற்கான பயிற்சி அளிக்கப்பெறுகின்றது, இப்பொழுது பி. ஏ, பி. எஸ். ஸி. படித்த மாணவர்கள்கூட இப்பயிற்சிபெற முன்வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான பயிற்சி நிலையம் கடலூரில் உள்ளது.

பனைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான பல நிறுவனங்கள் துணையோடு பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பெற்று வருகின்றன.

உறுபசியும் ஓவாப்பிணியும்
செருபகையும்
சேரக்தியல்வது நாடு.

என்று ஒரு நல்லநாட்டிற்கு இலக்கணம் கூறினர். திருவள்ளுவர் இன்றைய உலகம் சுசிப்பிணி என்னும் வல்லூறை எதிர்த்து வெற்றிகாணுவதற்கான முயற்சியில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுள்ளது, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கான பெருமுயற்சிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைந்து பெருகிவரும் மக்கட் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கானமுயற்சிகள் இன்னொருபுறம் நடைபெறுகின்றன. இந்நிலையில் உணவு உற்பத்திக்குப் பயன்படக்கூடிய நிலங்களில் கரும்புபயிரிடுதல் போன்ற செயல்கள் இன்னொருபுறம் நடைபெறுகின்றன. இங்கு வெள்ளைச் சர்க்கரைக்காக வேளாண்மைக்குப் பயன்படும் நஞ்சை நிலத்தில் கரும்பு பயிரிடப்பெறுகிறது.

பண்டத்தரிப்பு, செவ்

இளவாலையைச் சேர்ந்த திரு நீக்கிலஸ் அருளானந்தம் என்பவருக்கு சொந்தமான பெறுமதி வாய்ந்த நைலோன் வலைகள் இளவாலைத்துறையில் வைத்து விஷமிகள் சிலரால் தீவைக்கப்பட்டதால் எரிந்து சாம்பலாயின [illegible] பொலிசார் இதுபற்றிப் புலன் [illegible]னர்.

ஜயறன் எழுதுவது

மலேயாவிலே சென்ற முறை நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்குச் செல்லவேண்டுமென்று மனதுக்குள் ஆசை. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் அது முடிந்தது. கட்டுரை ஏதும் எழுதி அனுப்பினால்—அது ஒப்புக்கொள்ளப்பட்டால்— பிரதிநிதியாக செல்லலாமென்று அறிந்தேன். பல்லாண்டுகளாக ஏதேதோ கட்டுரைகள் எழுதிவருகிறேன். ஆனால் தமிழ்ஆராய்ச்சிபற்றி எனக்கென்ன தெரியும்? என்ன கட்டுரை எழுதுவது? எழுதினாலும் அது தள்ளப்பட்டுவிட்டால்! ஒரு பெரியார் மலாயா மகாநாட்டுக்காக ஒரு கட்டுரையை உற்சாகமாக எழுதியனுப்பினார் அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. அதனால் அவர் எவ்வளவு மனச் சங்கடப்பட்டார் தெரியுமா?

இம்முறைகூட மதுரை பல்கலைக் கழக உபவேந்தர் டி. பி. மீனாட்சிசுந்தரனார் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி அனுப்பினாராம். ''வெளிப்பிரதேசங்களில் தமிழின் செல்வாக்கு --கன்னடப் பிரதேசத்தில்'' எனும் விஷயமாக மூன்று பக்கங்களில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பினேன். !அது எங்கிருக்கிறதோ தெரியவில்லை'' என்று பகிரங்க மகாநாட்டில் தலைமைவகித்துப் பேசுகையில் ஒருவித உணர்ச்சியுடன் தெரிவித்தார்கள். இதனால் டி. பி. எம். அவர்கள் இந்த ஸ்தாபனத்திலிருந்தே விலகிவிட்டதாக ஒரு வதந்தியும் உலவியது. இதையும் அவர் குறிப்பிட்டு, தாம் இந்த ஸ்தாபனத்திலிருந்து விலகவில்லை என்றும், அதைத் தெரிவிக்க இதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டதாயும். பெரிய மனதுடன் குறிப்பிட்டார். அவர் சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு ஸ்தாபகரில் ஒருவர். அவர் ஓர் உப-தலைவருமாவார்.

''அக்கட்டுரை உள்ளதா, அதை 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கிறோம்'' என்று அவரிடம் தயக்கத்துடன் கேட்டேன். அது ஆங்கிலத்தில் இருப்பதாயும், 'ஈழநாட்டு'க்குத் தருவதாகவும் அன்புடன் கூறினார் அவர். ஓர் உப-தலைவரும், பல்கலைக்கழக உபவேந்தருமான ஒரு பெரிய தமிழ் அறிஞரின் கட்டுரைக்கே இப்படி நேர்ந்ததாயின் ஒன்றுக்கும் பற்றாத என் போலியர் கதி என்ன?

சிலர் நல்ல கட்டுரைகள் எழுதி அனுப்பியதாயும் அவை இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டும், சென்னையில் ஒதுக்கப்பட்டதாகவும் அறிந்தேன். கொழும்பில் ஒதுக்கப்பட்ட ஒரு கட்டுரையைச் சென்னை எப்படியோ ஒப்புக்கொண்டுவிட்டதாம்! இதெல்லாம் கேட்க, சிதம்பர சக்கரமாக இருந்தது. எப்படியும் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டுரையாளருக்கு என் வாழ்த்துக்கள்! ஒதுக்கப்பட்ட கட்டுரையாளருக்கு அனுதாபங்கள்! கட்டுரை ஒதுக்கப்பட்டாலும் ''விசேஷமாக அழைக்கப்பட்டவர்''களாக அவர்களில் சிலர் சென்னை விழாவுக்கு வந்து கலந்துகொண்டதைக் கண்டேன். மகிழ்ச்சியாக இருந்தது.

மலேயா மகாநாட்டிலே யாரோ ஒரு பத்திரிகைக்காரருக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று ஒரு புகார் இருந்தது. அதைப் பற்றி அப்பத்திரிகை எழுதியிருந்ததை எடுத்துக்காட்டி இருந்தேன். பின்னர் அது சரியல்லவென்று கிடைத்த மறுப்பை உடன் வெளியிட்டதுடன், இவ்வித மகாநாட்டுக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் அனைத்துக்கும் அழைப்பு அனுப்பவேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டிருந்தேன். இம்முறை சென்னை மகாநாட்டுக்கு வருமாறு இலங்கையிலுள்ள தமிழ் தினசரிப் பத்திரிகைகளில் அநேகமாக எல்லாவற்றுக்கும் அழைப்பு அனுப்பப் பெற்றதாம். அழைப்புக் கிடைத்தும் கடைசிவரை செல்லுவது எனக்கு நிச்சயமில்லாதிருந்தது. பலபல தடைகள். திருவருள் கூட்ட முடிவில் இவனும் செல்லமுடிந்தது.

ஃ ஃ

சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் இறங்கியதும் மேளம், மாலை முதலிய விசேஷ வரவேற்புகள் இருக்கும் என்று ஏதேதோ எதிர்பார்த்தேன், ஆனால் 'ஹாஸ்பிடாலிடி' [உபசரணை] குழுவின் சார்பாக வந்திருந்தவர், பிரதிநிதிகளை மட்டுமே ஏற்றிச் செல்ல வந்திருப்பதாயும் மற்றவர்கள் தங்களுக்கான இடம் முதலிய ஒழுங்குகளைத் தாங்களே செய்துகொள்ள வேண்டுமென்றும் தெரிவித்ததும், எப்படி இருக்கும்! இலங்கையிலிருந்து பல முக்கியஸ்தர்கள் என்னுடன் இருந்தனர். அவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை ''உபசரணைத் தலைவரிடம் நேரில் பேசுங்கள்'' என்று எங்களைப் பல கார்களில் மவுண்ட் ரோட்டிலுள்ள 'டூ' மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள் 'சுகமான 'ஏர் கண்டிஷன்' அறை. நல்ல காப்பி பார்த்தாலே பெரிய மனிதர் என்று யாரும் கருதக்கூடிய ஒருவர். ''என் பெயர் நாராயணசாமி. உபசரணைக் குழுவின் தலைவன். இவ்வித நிலை ஏற்பட்டதற்காக உபசரணைக்குழுத் தலைவன் என்ற முறையில் வெட்கப்படுகிறேன். இலங்கையிலிருந்து பிரதிநிதிகளும் பார்வையாளருமாக 55 பேர்

[8ம் பக்கம் பார்க்க]

அவசர யுகத்தில் நாடகம்

மலர் வெளியீட்டு விழாவில்

தேவன் பேச்சு

இராமாயணத்தில் காணும் வள்ளுவன் உள்ளம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி வருடாந்த சஞ்சிகையான சுடரொளி வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் கல்லூரி பதில் அதிபர் திரு. சி கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது.

சுடரொளி சஞ்சிகையை திரு. ஷண்முக குமரேசன் வெளியீட்டு உரை நிகழ்த்துகையில் உள்ளத்தில் உண்மை வேண்டுமென்றும், அதுவே உண்மையான நல்லசிந்தனை ஏற்படுத்துமென்றும் குறிப்பிட்டார். காலஞ்சென்ற ஆசிரியர் சுந்தரலிங்கம்பற்றி ஆசிரியர் சிவகுரு நினைவுரைகள் வழங்கினர்.

திரு க. சிவராமலிங்கம் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்ற வள்ளுவரது இலக்கணத்துக்கு இலக்கியமாக கம்பன் தமது பாடல்கள் பலவற்றில் கருத்துக்களைப் பெய்துள்ளார்.

''கைகேசி செய்த கொடுமைகளை எல்லாம் மறந்து அவளைத் தாயாகவும் அவள் மகன் பரதனைத் தம்பியாகவும் கொள்ளும் உரிமையைத் தசரதன் இறக்கும்போது மறுத்ததன் காரணமாக [illegible] உள்ளம் வருந்த தீயன் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' என்று தசரதனைவேண்டிய உயர்ந்த பண்பு வள்ளுவன் காட்டும் இலக்கணத்துக்கு உயர்ந்த ஓர் இலக்கியமாகும். தீமை செய்தவர்களையும் தண்டிக்கும் மார்க்கத்தை வள்ளுவன் கூறுமல்விடவில்லை 'அவர் நாண நன்னயம்செய்துவிடல' என்ற இலக்கணத்தைக் கம்பன் இராமன்வாயிலாக இங்கு புகுத்தி ஒரு சிறந்த தமிழ் இலக்கிய வாழ்வுக்கு வழிகாட்டிவருகின்றான்''

'நாடகத் தமிழ் பற்றி திரு. இ. மகாதேவா [தேவன்] பேசியதாவது:-

நாடகக்கலை வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள் நாடகம் பற்றிய கருத்துக்களைப் பத்திரிகைகள் மூலம் அடிக்கடி தந்துகொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. நாடக இலக்கணம்பற்றிய நூல்கள் இல்லாமையினாலும், அவைபற்றிய நூல்களை வெளியிட்டால் மக்களுக்கு எட்டாது என்பதினாலும் பத்திரிகைய இதற்குச் சிறந்த கருவியாகும்.

ஆயினும் ஏனைய நாடுகளில் நாடகக்கலை சமுதாய முன்னேற்றத்துக்குப் பயன்படும் ஒரு கருவி என ஒப்புக்கொள்பவர்கள் அதே வகையில் ஈழத்திலும் தமிழ் நாடகங்கள் வளரவேண்டுமென்று விளக்கும் முயற்சியில் அரைகுறை ஆங்கில அறிவை அடிப்படையாக வைத்து அகில உலக மேதைகளின் நாடக நுணுக்கங்களை கரைகண்டவர்களைப்போல துரதிர்ஷ்டவசமாக ஆங்கிலப் பயிற்சியில்லாமக்களுக்கு முன் தத்துவ ஞானிகள் வேஷம் போடுகிறார்கள். அவர்கள் தமிழ் நாடகங்களுக்கு ஆங்கில இலக்கணத்தை யார்த்தடியாக வைத்து விமர்சனம் செய்கிறார்கள்.

இந்த அவசர யுகத்தில் இரவு முழுவதும் நாடகம் நடாத்துவது என்பது நடக்கும் காரியமல்ல. ஆகையால் முன்னைப்போல நவரசங்களும் ஒரு நாடகத்தில் இடம்பெறும் வாய்ப்பு இனியில்லை. மேலை நாடுகளில் போல் நகைச்சுவைக்கும், வெவ்வேறு உணர்ச்சிகளுக்கும் தனித்தனி நாடகங்கள் தேவையென்கிறவிடும் இந்நிலை ஏற்படும்போது மேடைத் தமிழ் எப்படி அமையவேண்டுமென்பதற்கும் ஒரு முடிவு ஏற்படும். அகில உலகத்தரத்தை எட்ட வேண்டும் என நாம் விரும்பும் நாடகங்கள் வெறும் கொச்சைதமிழினால் மட்டும் அந்நிலை அடைந்துவிடும் என்று எண்ணுவது பெரும் தவறு. ஆகவே எழுத்தாளர்களை பேசுவது போல் எழுது எனக்கட்டுப்படுத்துவதை விட்டு நடிகர்களை எழுதுவதுபோலப் பேச என்று பயிற்றுவது நல்லது.

இன்னிசைக் கச்சேரி, மிருதங்கக்கச்சேரி ஆகியவையும், கல்லூரி மாணவர்களின் 'மணிமகுடம்' நாடகம் ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தின் 'சக்கடத்தார்' நாடகம் ஆகியவையும் இடம்பெற்றன. [கா.நி]

"அமைதியான முறையில் போராட்டம் நடத்தப்படும்"

பூநகரி, திங்கள்

பூநகரி — தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிச் செயலாளர் திரு. கே. தனபாலசிங்கம், வடமாகாண இ. போ. ச. முகாமையாளருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கே. பி. இரத்தினத்துக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் பூநகரியில் நடைபெற்று வரும் இ. போ. ச. பஸ் சேவை சீர்கேடாக இருக்கின்றதென்றும் யாழ்ப்பாணம் — கேரதீவு, சாவகச்சேரி — கேரதீவு பஸ் சேவை மிகவும் கேவலமாக இருக்கின்றதென்றும், பஸ் சேவையைத் திருத்தியமைக்கும்படி பலமுறை புகார் செய்யப்பட்டும் கவனிக்கப்படாதிருப்பது வருந்தத்தக்கதென்றும் பூநகரி மக்களின் பொறுமையான உள்ளங்களை யாழ். — கேரதீவு சீர்கேடான பஸ் சேவை தட்டியெழுப்பியிருக்கின்றதென்றும் பூநகரியில் நடைபெறும் இ. போ. ச. சேவையைத் திருத்தியமைத்தும் பூநகரிக்கும் மன்னாருக்கும் முன்போல் சேவையை ஏற்படுத்தும்படியும், தகுந்த சேவையமைத்து மக்களின் குறையைத் தீர்க்காவிட்டால் அமைதியான முறையில் வடமாகாண இ. போ. ச. முகாமையாளரின் காரியாலயத்தின் முன் போராட்டம் நடத்துவதற்கு பூநகரி மக்கள் தயாராகியுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

"இலக்கியத்தில் புகழ்பெற்ற யாழ்ப்பாணம்

நூல்கையளிப்பு வைபவத்தில் உள்ளூராட்சி அமைச்சர்

யாழ்ப்பாணம், புதன்

''யாழ்ப்பாணம் சரித்திர வாயிலாகவே புகழ்பெற்றது யாழ்ப்பாணத்து மக்கள் பண்டுதொட்டு இலக்கியத் துறையில் புகழ்பெற்றவர்கள். தமிழுக்காக உழைத்த பல அறிஞர்களையும், புலவர்களையும் ஈன்றெடுத்தது யாழ்ப்பாணம். இங்கிருக்கும் இந்து பொதுஜன நூலகத்தில் சகல நூல்களும் இருக்காவிட்டால் இங்கு இலக்கிய வளர்ச்சிக்கோ அல்லது சமுதாய வளர்ச்சிக்கோ இடமில்லை''

யாழ்ப்பாணம் பொதுஜன நூலகத்திற்கு சென்னை பதிப்பாளர் சங்கம் அன்பளித்த நூல்களைக் கையளித்துப் பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு எம். திருச்செல்வம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்வைபவம் நேற்றுமுன்தினம் மாலை பொதுஜன நூலக மேல்மாடியில் நடைபெற்றது.

யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளரும், உதவி உள்ளூராட்சி ஆணையாளருமான திரு. எஸ். வி. மாணிக்கவாசகரிடம் நூல்களைக் கையளித்துப் பேசுகையில் அமைச்சர் திருச்செல்வம் மேலும் குறிப்பிட்டதாவது:-

கடந்த இருவருடங்களாக யாழ். மாநகரசபை, ஆணையாளர்கள் ஆட்சியில் சிறப்பாக இயங்கிவருகின்றது. நான்கு மாதங்களுக்கு முன்னர் இங்கு வந்தபோது இங்கு போதிய தமிழ் நூல்கள் இல்லாத குறையை நான் கண்டேன். தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டையொட்டி நான் சென்னைக்குச் சென்றபோது சென்னைப் பதிப்பாளர் சங்கத்திடம் இந்தக் குறையைத் தெரிவித்தேன். அவர்கள் விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல், இலக்கியம் சம்பந்தமான நூல்களை எமக்கு அன்பளிப்பாகத் தந்துள்ளார்கள்.

அமெரிக்காவில் வாஷிங்டனிலுள்ள நூல் நிலையத்துக்கும், தமிழ்நாட்டிலுள்ள கன்னிமாரா நூல்நிலையத்துக்கும் சகல நூல் வெளியீட்டாளர்களும் தமது நூல்களின் ஒரு பிரதியை அனுப்பி வருகின்றார்கள். இது ஒரு சட்டமாகவும் இருந்து வருகின்றது இதனால் இங்கு சகல நூல்களும் இடம்பெற சந்தர்ப்பம் கிட்டுகின்றது எமது இலக்கியமும் வளர இலங்கையிலுள்ள சகல நூல் வெளியீட்டாளர்களும் நூல் வெளியீட்டுச் சபைகளும் நூல்களின் ஒரு பிரதியை நூல்நிலையத்துக்கு அனுப்பிவைத்தால் எமது இலக்கியங்கள் நிச்சயம் வளரமுடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''யாழ்ப்பாணம் ஒரு செந்தமிழ் நாடு என்றும், யாழ்ப்பாண மக்களே செந்தமிழ் பேசுபவர்கள் என்றும், இது தொடர்ந்து இருக்க வேண்டுமென்றும் அரசியல் ஞானியான திரு. ராஜாஜி சென்னையில் தன்னிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் பேசுகையில் ஆதிகாலத்தில் மன்னர்கள் வளர்த்த தமிழை, இடைக்காலத்தில் வள்ளல்கள் வளர்த்தார்களென்றும், இன்று உள்ளூராட்சி அமைச்சே இதனைச் செய்கின்றதென்றும் குறிப்பிட்டதோடு இலங்கையில் வெளியிடப்படும் நூல்களின் ஒவ்வொரு பிரதியும் இங்கு தவறாமல் அனுப்பப்படல்வேண்டுமென்றும் தெரிவித்தார்.

மாநகரசபை ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா நன்றி தெரிவித்துப் பேசினார். [கா. நி]

பொது அறிவும் உள்ளூர் அறிவும்

வினாக்கள்

1. பிரபல வைத்தியராக விளங்கிய சிங்கள அரசன் யார்?
2. திறைசேரியின் செயலாளர் [S. T] யார்?
3. கடைசியாக ஒலிம்பிக் விளையாட்டுக்கள் எந்த நாட்டில் நடைபெற்றது?
4. கென்யாவின் [Kenya]வின் தலைநகரம் யாது?
5. செனற்சபைத் தலைவர் [President of the Senate] பெயர் யார்?
6. டெலிவிஷனை [Television] கண்டுபிடித்தவர் யார்?
7. இலங்கைக்கு வந்த முதலாவது ஆங்கிலேயர் யார்?
8. இலங்கையில் அதி நீண்ட நதி யாது?
9. பனமா கால்வாயின் [Panama Canal] நீளம் யாது?
10. உலக வங்கி எங்கே அமைந்துள்ளது?
11. கீதாஞ்சலியை யாத்தவர் யார்?
12. இலங்கை கமத்தொழில் பகுதி அதிபதி [Director of Agriculture] யார்?
13. ஸாம்பியா [Zambia] வின் ஜனாதிபதி யார்?
14. பரப்பளவில் உலகில் மிகப் பெரிய நாடு யாது?
15. தேசிய பாலசபைத் தலைவர் யார்?

[விடைகள் 7-ம் பக்கம்]

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

புதன் 31-1-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 ஞானாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-30 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை

344 மீற்றர் & 49 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 புல்லாங்குழல், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர்கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 யூனெஸ்கோ உரைச்சித்திரம், 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்தஇசை.

இடமாற்றம்

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி அதிபராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு. பே. தம்பையா, கல்வியங்காடு சைவ வித்தியாசாலைக்கு தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மீனவர்களுக்கு வீடுகள்

புலோலி, செவ்வாய்

மீனவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை வடமராட்சிக் கரையோரப் பகுதிகளில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இந்த வீடுகள் கட்டுவதற்கான ஒழுங்குகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது அரசாங்க அளவைப்பகுதியினர் தற்பொழுது நிலங்களைப் பரிசீலனை செய்கின்றனர். விரைவில் வீடமைப்புத் திட்டம் நிறுவுவதற்கான அத்திபாரக் கல் உள்ளூராட்சி அமைச்சினால் நாட்டப்படுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

"வீட்டுக்கு வந்தால் 'ஸ்பனர்' தருவேன்என்றார்

அங்கேபோனதும் அம்மாவின் கழுத்தில் வெட்டினார்"

கட்டுவன் மரணவிசாரணையில் சாட்சியம்

குரும்பசிட்டி, செவ்.

காங்கேசன்துறைப் பொலிஸ்பகுதியைச்சேர்ந்த கட்டுவன் கிராமத்தில்கிராம சேவையாளரின் வீட்டு வாசலில் நேற்று முன்தினம் கழுத்து வெட்டப்பட்டு இறந்து கிடந்த 36வயதான கந்தையாபெண் அன்னம்மாவின்மரணம்பற்றி மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம்ஸ்தலத்தில்விசாரணை நடத்தினார்

காலஞ் சென்றவரின் மகளான லலிதாதேவி கந்தையா சாட்சியமளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

சம்பவதினம் பிற்பகல் இரண்டு மணியளவில் தனது ஸ்பனர் கருவியை யாரோ திருடிவிட்டதாக எனது தங்கையார்சத்தமிட்டுஏசிக்கொண்டிருந்தார். அச்சமயம்அங்கு வந்த சந்தேகநபர் உன்ரைஸ்பனரை நானா திருடினேன் என்று கேட்டார். பின்னர் நான் அல்ல எனது தாயார் தனது வீட்டுக்குவந்தால் ஸ்பனரைத்தருவதாகச்சொன்னார். நானும் எனது தாயாரும் சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்றோம். அங்குபோனதும் அவர் ஒரு சிலர் கையால் தாயாரைத் தாக்கவந்தார். தாயார் அதைத் தடுத்தார். உடனே அவர் ஒரு கத்தியால் தாயாரின் கழுத்தை வெட்டினார். வெட்டுவிழுந்ததும் கைகளினால் தாங்கிக்கொண்டு தாயார் விதானையார் வீட்டுக்கு ஓடினார்.

மாண்டவரின் கணவரான சின்னத்தம்பி கந்தையாவின் உடலிலும் கத்திவெட்டுக்காயங்கள் இருந்தன. அவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரின் உடலிலும் சிறுகாயங்களிருந்தன அவருக்கும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

சந்தேகநபரான சந்திரசேகரம் என்பவரை றிமான்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி அடுத்த மாதம் 11ம் திகதி அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி தெரிவித்தார் விசாரணையின்போது காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் எஸ். வி. மூர்த்தி சாட்சிகளை ஆஜர் செய்தார்,

இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட தடயப்பொருள்களைத் தேடிச்சென்ற இன்ஸ்பெக்டர் மூர்த்தியும் அவரது பொலிஸ் கோஷ்டியினர் சந்தேகநபர் வீட்டிலும் அக்கப் பக்கங்களிலும் 'பெட்ரோமாக்ஸ்' லாம்புகள், தையல் மெஷின்கள், பன்னிரண்டு சைக்கிள்கள் மற்றும் பொருள்களையும் கண்டெடுத்து காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இப்பொருள்கள் களவுபோனபொருள்களாக இருக்கலாம் அல்லது சட்டவிரோதமாக ஈடுபிடிக்கப்பட்டவைகளாக இருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர்.

காலம்சென்ற அன்னம்மா எட்டுப் பிள்ளைகளின் தாயாராவார்.

நெடுந்தீவுச்செய்திகள்:

டென்மார்க் மாணவரை நெடுந்தீவு கவர்ந்தது

நெடுந்தீவு, செவ்.

டென்மார்க்கிலிருந்து இலங்கைக்கு உல்லாசப் பிரயாணியாக வந்திருக்கும் திரு. யாரிசென் யக்கோப் செவ் யாழ்ப்பாணம் வந்தபோது நெடுந்தீவிற்கும் விஜயஞ்செய்தார் நெடுந்தீவு தமக்கு நன்றாகப் பிடித்துக்கொண்டதென்றும் நெடுந்தீவின் கடற்கரை அழகும் குதிரைகள் நிற்கும் பச்சைப் பசேலென்ற புல்வெளியும் எவரையும் கவரக்கூடிய அழகுடையனவாக இருப்பதாகவும் கூறினார், தாம் தற்போது உயர்தரபாடசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு சர்வகலாசாலைப் படிப்புக்கு சேரமுன் கிடைத்த லீவு நாட்களை வீணாக்காது பயன்படுத்தவே இங்கு வந்ததாகவும் இலங்கையைப் பார்த்து முடித்ததும் இந்தியா செல்லவிருப்பதாகவும் இந்தியா பார்த்து முடிந்ததும் தாம் புரட்டாதிமாதம் தாயகம் திரும்பவிருப்பதாகவும் கூறினார். சுற்றுப் பிரயாணத்துக்கானசெலவை தாம் ஒரு தபால் விநியோகஸ்தராய் சிலமாதம் வேலைசெய்ததன்மூலம் பணம் சேர்த்ததாகவும் கூறினார்.

நெடுந்தீவில் நுளம்புக்கடி

நெடுந்தீவில் தற்போது நுளம்புக்கடி என்றுமில்லாதளவுக்கு பெருகியுள்ளது இரவு முழுவதும் சிலவீடுகளிலுள்ள குழந்தைகள் நித்திரையே இல்லாது அழுதவண்ணம் நுளம்புக்கடியால் துடிக்கிறார்கள். டி. டி. ரி. எண்ணை இங்கு பலவருடங்களாக அடிக்காததால் இம்முறை பெருவாரியான நுளம்பு மக்களைத் துன்புறுத்தி வருகிறது. இங்கு தற்போது மாற்றலாகி வந்திருக்கும் மலேரியா தடுப்பு இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் திரு. எஸ். பாலசிங்கம் வீடுவீடாகச் சென்று பரிசோதித்து வருகிறார். இதுவரை எவரும் இந்நோயால் பாதிக்கப்படவில்லையென்றும், சிலர் காய்ச்சல் இருந்தால் அதை அறிவிக்கத் தயங்குகிறார்களென்றும் கூறினார்.

பெற்றோர் ஆசிரிய சங்க கூட்டம்

நெடுந்தீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தம் பொதுக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் பாடசாலைத் தலைமையாசிரியரும் சங்கத்தின் தலைவருமான திரு. க. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமையுரையில் 'இன்று கல்விஇலாகா எல்லாப் பாடசாலைகளிலும் கட்டாயமாக திருப்திகரமாக பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் இயங்க வேண்டும் என்பது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமிடையே மிகவும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்பதே ஆகும். பாடசாலையோ பிள்ளைகளோ நன்றாக இயங்கவோ கற்கவோ பெற்றோரும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பால்தான் முடியும். இப்பாடசாலையில் 100 க்கு அதிகமான பிள்ளைகள் கல்விகற்பதால் பாட

(7-ம் பக்கம்பார்க்க)

செய்தித் திரட்டு

கொள்கைதிட்டம்

சுதந்திரக் கட்சி தயாரித்துள்ள பொதுக் கொள்கைத் திட்டத்தில் தமிழ், முஸ்லீம் கலாச்சாரப் பல்கலைக் கழகங்கள் வெவ்வேறாக நிறுவப்படுமென்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. மற்றும் யூனானி, சித்த வைத்தியம் நீடிக்கப்படுமென்றும் அவற்றுக்கு முக்கிய இடமளிக்கப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

ஃ ஃ

ராஜினாமா

தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரான திரு. ஜே. எஸ் சுந்தரம் தமிழரசுக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். தனது ராஜினாமாவை இவர் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளாராம். ராஜினாமாவிற்கான காரணத்தை விரைவில் அறிவிப்பாரென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஃ ஃ

பால்மா தொழிற்சாலை

நாரளையில் நிறுவப்படவிருக்கும் பால்மா தொழிற்சாலை இன்னும் இரண்டுவருடங்களில் ஆரம்பமாகும்.

எண்பது லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் இத் தொழிற்சாலைக்கு தினசரி 37,500 போத்தல் பால் தேவைப்படும். இந்த பால்மா உற்பத்தி ஆரம்பமானதும் வருடமொன்றுக்கு 50 லட்சம் ரூபா வெளிநாட்டு செலாவணி செலவிடப்படும்.

ஃ ஃ

வன இலாகா முயற்சி

வனபரிபாலன இலாகா தேக்குமர உற்பத்திக்காக விஷேச குத்தகைத் திட்டத்தின் கீழ் 15,000 ஏக்கர் நிலம் விநியோகம் செய்ய விருக்கிறது. மேற்படி நிலத்தை வாங்க விரும்புவோர்களிடமிருந்து யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, நுவரேலியா ஆகிய பகுதிகளின் மாவட்ட வன இலாகா அதிகாரிகள் விண்ணப்பங்கள் கோரவிருக்கின்றனரென நீர்ப்பாசன மின்சார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஃ ஃ

கட்டிட வசதியில்லை

ஹல்துமுல்லை தமிழ் பாடசாலையில் சுமார் 400க்கு மேற்பட்ட தமிழ் பிள்ளைகள் கல்விகற்கின்றனர். இவர்கள் எல்லோரும் ஒழுங்காக இருந்து படிப்பதற்கான வகையில் கட்டிட வசதியில்லையாம். அனேக பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியே வெறுந் தரையில் உட்கார்ந்துதான் படிக்கின்றனர்.

ஃ ஃ

வாசிகசாலை

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நீண்ட காலமாக ஆழ்ந்திருந்த பண்டாரவளை நகரசபை புதிய வாசிகசாலை திட்டம் இந்த ஆண்டில் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகிறது

ஒருலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் செலவில் தீர்மானிக்கப்படவிருக்கும் இப்புதிய வாசிகசாலைக் கட்டிடம் இரண்டு மாடிகளுடனும் நவீன அமைப்புகளுடனும் அமையுமெனக் கூறப்படுகிறது.

ஃ ஃ

விலை அதிகரிப்பு

இருகமம், கந்தானை, பதுவத்தை ஆகிய இடங்களில் ஒருபுசல் நெல் 25 ரூபா முதல் 30 ரூபாவரை விற்கப்படுகிறது அரசாங்கம் ஒருபுசல் நெல் 14 ரூபா என விலை நிர்ணயம் செய்திருந்தும் கள்ளச் சந்தைக்காரர் இவ்வாறு விற்கின்றனர்.

ஃ ஃ

இலவச உணவு

மாத்தறை மருத்துவ மனையில் சிகிச்சைபெறும் சுமார் 500 நோயாளிகளுக்கு மாத்தறை சௌக்கிய சேவா சங்கத்தின் ஆதரவில் கடந்த பூரணை தினத்தில் உபசரிப்பு வழங்கப்பட்டது. மேற்படி சங்கத்தினரால் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் அவ்வுபசரிப்பு வைபவத்தின் போது நோயாளர்களுக்கு ஒருவேளை இலவச உணவும் ஆரோக்கிய உணவுகளும் வளங்கப்படுகின்றன.

பாராட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் வீதியில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிப் பட்டினசபை உறுப்பினர்களை பாராட்டுவதற்கும் பட்டினசபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களை ஆதரித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாகவும் ஒரு கூட்டம் இன்று மாலை கிளிநொச்சிப் பாராளுமன்றஉறுப்பினர் திரு. கா பொ. இரத்தினம் தலைமையில்நடைபெறஇருக்கிறது.

அறிவக நிர்வாகிகள்

அளவெட்டி, செவ்வாய்

மயிலிட்டி வள்ளுவர் அறிவக நிறுவனத்தின் வருடாந்தக்கூட்டம் சா. அழகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது புதுவருட அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. சா. அழகரத்தினம், திரு. க தங்கலங்கம், தலைவர்: திரு பொ அருளானந்தம், உபதலைவர்: திரு. ம. தங்கலிங்கம், காரியதரிசி: திரு சி தேவதாஸ், உபகாரியதரிசி: திரு. பா கிருதரகோபால், தனாதிகாரி: திரு. சி கருணாகடாச்சகுரு உபதனாதிகாரி: திரு. செ சிவதாசன். பொறுப்பாளர்கள்: திரு. செ. புத்திசிகாமணி, திரு. த. வேல்சாமி. விளையாட்டுக்காரியதரிசிகள்; திரு. சீ. மாணிவாசகம், திரு. க சிவசோதி, பொதுவேலை நிர்வாகம்: திரு. க. வில்வயங்களம்

5 பேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

புதிய உறுப்பினர்

சுழிபுரம், செவ்

சுழிபுரம் மேற்கு கலைமகள் சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஜகர்: சு. கந்தசுவாமி ஜே பி இ சதாசிவம், தலைவர்: மு. தம்பிஐயா, உபதலைவர்: மா. மகாதேவன், காரியதரிசி: ஆ ஏரம்பு, உபகாரியதரிசி: வ. புலேந்திரன். தனாதிகாரி: ச. இராமலிங்கம். நிர்வாகசபைஉறுப்பினர்: மு. வரதராசா, பொ. துரைசிங்கம், மா. குணரத்தினம், மு. கனகசபை.

டென்மார்க்......

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

சாலை இடவசதி மிகமிகக் குறைவாய் இருக்கிறது இப்பாடசாலை இடவசதி பெருக்காவிட்டால் பாடசாலை நடாத்தமுடியாதநிலை தான் ஏற்படும்' என்றார்.

திரு நா. முருகேசு பேசுகையில் இப்பாடசாலை மாவித்தியாலயத்தின் முன் இருப்பதாலும் இட வசதியோ அல்லது ஆங்கிலம். கணிதம். பொது விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லாததாலும் இரண்டு பாடசாலைகளையும் இணைத்து நடாத்துவது நன்று. தொடர்ந்து இரு பாடசாலைகளும் இணைந்து நடாத்துவதால் இங்குள்ள தலைமையாசிரியர் இப்பாடசாலைக்கே தலைமையாசிரியராய் இருக்க மற்றும் ஆசிரியர்கள் மகாவித்தியாலயத்திலும் மாவித்தியாலயத்திலுள்ள விசேடபயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இப்பாடசாலையிலும் கற்பிக்கக்கூடிய வசதி ஏற்படும் இதனால் பிள்ளைகள் நல்ல பலனைப் பெறலாம்'' என்றார்.

புதுவருடநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. இராமநாதம் (தலைமை ஆசிரியர்). உபதலைவர் திரு. நா. அ. முருகேசு, காரியதரிசி திரு. வி. சுப்பிரமணியம், தனாதிகாரி செல்வி ம. வைத்தியநாதன், மற்றும் திருவாளர்கள் வே. இராமநாதன், க. புண்ணியசிங்கம், திருமதி என். இராமநாதன் ஆகியோர் நிர்வாக அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்து விளையாட்டுக் கழகம் சாம்பியனானது

அளவெட்டி, செவ்.

கட்டுவன் ஞானோதயா விளையாட்டுக் கழகத்தினரின் 3-வது வருட உதைபந்தாட்டச் (நொக் அவுட்) சுற்றுப்போட்டியில் இம்முறை இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் முதற்பிரிவுச் சம்பியன்ஸ்தானத்தைப்பெற்று 'பொன்னம்பலம்' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது இரண்டாம் பிரிவில் தெல்லிப்பளை ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகி 'கணேசையர்' வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்தது

யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 1-ம் பிரிவுப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும், தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இறுதியில் இந்து 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. ரி. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இதையடுத்து நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் வீமன்காமம் யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும். தெல்லிப்பளை ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்டன.

தெல்லிப்பளை 1—0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு சண்முகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

தீயபழக்கங்களை ஒழிக்க விளையாட்டுப் போட்டி

அளவெட்டி, செவ்.

படித்த வாலிபர்கள் ஓய்வு நேரங்களில் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டால் தீய பழக்கங்களை ஒழித்துக்கட்ட முடியும், அரசாங்கம் விளையாட்டுத்துறை அபிவிருத்தி அடையவேண்டும் என்னும் நோக்குடன் இப்பகுதிக்கு இருவிளையாட்டுப் போதனாசிரியர்களை நியமித்துள்ளது. இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த போதனாசிரியர்கள்மூலம் விளையாட்டுத் துறையில் புதிய புதிய வகையில் பலதரப்பட்ட விளையாட்டுக்களை ஆக்கி அவைகளைப்பயன்படுத்தி விளையாட்டுத்துறையில் இப்பகுதி இளைஞர்கள் முன்னேறவேண்டும்.' என வலி — வடக்குக் காரியாதிகாரி திரு. பி எவ். பற்றிக் யூனியன் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் கூறினார்.

கட்டுவன் ஞானோதயவிளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி பரிசளிப்புவிழா திரு. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது திரு. பற்றிக்ஸ் மேலும் குறிப்பிட்டதாவது:—

இளைஞர்கள் படித்தபின் வேலையிலலாது வேலைவாய்ப்புப் பெறுவதற்கு திரிந்தும் பலநாள்கள் சென்றே வேலை கிடைக்கும். எனவே அந் நாட்களில் இப்படிப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தி விளையாட்டுத் துறையில் நாம் பிறநாடுகளிலும் பார்க்க குறைந்தவர்கள் அல்ல என நிரூபித்துக் காட்டவேண்டும்.''

திரு. சின்னத்தம்பி பேசுகையில் வலிவடக்கில் ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

மாணவர் வேலை அனுபவத்திட்டம்

இன்று பிரதமர் ஆரம்பிப்பார்

கொழும்பு, செவ்வாய்

இவ்வருடம் அகில இலங்கைப் பாடசாலைகளின்முதல் தவணைக்கான வேலை அனுபவத்திட்டத்தைப் பிரதம மந்திரி திரு. டட்லி. சேனநாயகா இம்மாதம் 30ந் திகதி ஆரம்பித்து வைப்பார்.

இம்மாதம் 26-ம், 27-ம் திகதிகளில் இத்திட்டம் செயல்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஜனவரி மாதம் 30, 31ம் திகதிகளிலேயே பிள்ளைகளை வேலை அனுபவத் திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்றும், இத்திட்டத்தில் வைத்தியசாலைகளில் பணிபுரிதல், வீதிகள், வடிகால்கள் சுத்தம் செய்தல் ஆகியன அடங்கமாட்டாது என்றும், ஆபத்து விளைவிக்கக்கூடிய வேலைகள் எதிலும் பிள்ளைகளை ஈடுபடுத்தக் கூடாதென்றும் கூறும் சுற்று நிருபம் ஒன்று சகல பாடசாலைகளுக்கும் கல்விப் பகுதியினரால அனுபபி வைக்கப்பட்டுள்ளது

[உடு. நி.]

மோசடியா?

யாழ்ப்பாணம், புதன்

கிராம சேவையாளர்கள் இருவர் தோற்ற வேண்டிய சிங்களப் பரீட்சைக்கு வேறொரு அரசாங்க ஊழியர் தோற்றினாராம், இது சம்பந்தமான புலன் விசாரணையை இப்போது இரகசியப்பொலிஸார்மேற் கொண்டுள்ளனர்

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரே சம்பந்தபபட்ட அரசாங்க ஊழியர் என பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது ஒவ்வொரு பரீட்சைக்கும் 500ரூபா உபகாரமாகப் பெற்றே இவர் கிராமசேவையாளர்கள் இருவருக்கும் பதிலாக சிங்களப் பரீட்சைக்கு தோற்றியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் இரு கிராம சேவையாளர்கள் சம்பந்தமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனாவின் உத்தரவைத் தொடர்ந்து இரகசியப் பொலிஸார் இவ்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

[கா. நி.]

உதவி ஆணையாளரை பாராட்டி தீர்மானம்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி மேற்கு மத்தொனி [சண்டில்] திருவள்ளுவர் சனசமூகநிலைய நிர்வாகசபைப் பொதுக்கூட்டம் திரு. வா. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. உதவி உள்ளூராட்சி ஆணையாளராகவும் நெல்லியடிப் பட்டினம் கட்டைவேலி கிராமசபை ஆகியவற்றின் விசேட ஆணையாளராகவும் கடமையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் திரு எஸ். வி. மாணிக்கவாசகரின் சேவையைப் பாராட்டித் திருவாளர்கள் ஆ. வன்னியசிங்கம், க. தியாகராசா உட்பட வேறு பலரும் பேசினர்.

அன்னாரின் சேவை நலன்களைப் பாராட்டி நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. புத்ததாசா [Buddhadasa].
2. திரு. எச். ஜினதாசா சமரக்கொடி [Mr. H. Jinadasa Samarakody].
3. யப்பான் [Japan].
4. நெய்ரோபி [Nairobi].
5. திரு. ஏ. ரத்நாயக்கா [Mr. A. Ratnayake].
6. சேர் ஜோன் லொஜி பெயாட் [Sir John Logie Baird].
7. திரு. ருல்ஃப் விச் [Relph Fitch].
8. மகாவலிகங்கை.
9. 50 மைல்கள்.
10. வாஷிங்டன் டி. சி. [Washington D. C]
11. ரபீந்திர நாத் தாகூர் [Rabindranath Tagore].
12. திரு. எம். எஸ். பெரேரா [Mr. M S. Perera]
13. டாக்டர் கென்னத் குவாண்டா [Dr. Kenneth Kuanda].
14. சோவியத் ரஷ்யா [Soviet Russia].
15. திரு டி. சி. எல். அமரசிங்க [Mr D. C. L. Amerasinghe].

[அடுத்த மாதிரி வினாவிடைகள்
5-2-68-ல் வெளிவரும்]

உருத்திரபுரம் காவல்காரர் கொலைவழக்கு

வாலிபர் இராசரத்தினம் விடுதலை செல்லம்மாமீது கொலைக் குற்றம்

குற்றப்பத்திரிகை தாக்கலாகியது

யாழ்ப்பாணம், புதன்

உருத்திரபுரம் ஆசைப்பிள்ளை படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 32 வயது வாலிபரான இராசரத்தினம் நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசாவினால் விடுதலை செய்யப்பட்டார். கொலையுண்ட ஆசைப்பிள்ளையின் மனைவி செல்லம்மாமீது கொலைக்குற்றம் சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதம் 11-ம் திகதி விசாரணை நடைபெறும்.

கொலையுண்டவரின் மனைவியான செல்லம்மாவும்வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வாலிபரான இராசரத்தினமும் நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணையைப்பார்ப்பதற்காக கோட்டின் உள்ளேயும் வெளியேயும் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

வாலிபர் விடுதலை

சந்தேக நபரான இராசரத்தினம் சார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை ஆஜராகி வாதாடினார். இராசரத்தினத்துக்கு எதிராக போதிய சாட்சிகள் இல்லாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார் விடுதலை செய்யப்பட்ட இராசரத்தினம் அமைதியாக கோட்டிற்கு வெளியில் சென்றார்.

குற்றப் பத்திரிகை

கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராஜேஸ்வரன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார். இவ் வழக்கில் உருத்திரபுரத்தைச் சேர்ந்த ஆசைப்பிள்ளையை கொலை செய்ததாக அவரது மனைவி செல்லம்மாமீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செல்லம்மாவை தொடர்ந்து ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை காவல்காரரான ஆசைப்பிள்ளை கடந்த டிசம்பர் மாதம் 27-ம் திகதி இரவு படுக்கையில் வைத்து தலைவேறு உடல் வேறாக படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி செல்லம்மா பொலிசாரல் கைது செய்யப்பட்டார்.

செல்லம்மாவின் குடும்ப நண்பரென சந்தேகிக்கப்பட்ட இராசரத்தினம்என்ற வாலிபரை ஆக்கொலை சம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிசார் தேடி வந்தனர். சிலவாரங்களின்பின் இராசரத்தினம் பொலிஸில் சரணடைந்தார்.

கொலையுண்ட இடத்தில் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்ட கத்தியும் கோடரியும் ஆசைப்பிள்ளையின் மாதிரி இரத்தமும் அரசாங்க ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மல்லி பதுக்கல் அம்பலம்

200 ரு. மல்லி உடனடியாக பெர்லிஸாரால் விநியோகிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்.

கடைக்குள் மல்லியைப் பதுக்கி வைத்துக் கொண்டு விற்பனைக்கு இல்லை என்றுராம் வர்த்தக ஒருவர். உடனடியாக இவரது கடையைச் சோதனையிட்ட போது கடைக்குள்ளிருந்து சுமார் 200ருத்தல் மல்லியை பொலிசார் கண்டுபிடித்தனர்.

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள வர்த்தக ஸ்தாபன மொன்றிலேயே இந்தப் பதுக்கல் வேட்டை நடைபெற்றது. யாழ்ப்பாண பெலிஸ் நிலைய திடீர்பரிசோதனைக் குழு இன்ஸ்பெக்டர்திரு. எஸ். ஆர் ஜெயசிங்கா தலைமையால் இந்த சோதனை நேற்றிரவு நடைபெற்றது

கடைக்குள்ளிருந்து கண்டு பிடிக்கப்பட்ட சுமார் 200 ருத்தல்மல்லியும் ருத்தல் 84சதம் வீதம் உடனடியாகவே பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது இக்கடையில் மல்லி ருத்தல் ரூ3 25சத வீதம் விற்பனை செய்யப்பட்டதாகபொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (கா. நி.)

யாழ். பெரியாஸ்பத்திரியில்

சைக்கிள் களவைத்தடுக்க புதிய நடவடிக்கை

அடுத்தமாதம் செயல்படலாம்

நல்லூர், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அதிகரித்து வரும் சைக்கிள் திருட்டை தடுக்க பொலிசார் புதிய வழியொன்றைக் கைக்கொள்ளவிருக்கின்றனர்.

பொலிஸ் அதிபரின் ஆலோசனைக்கிணங்க பெரியாஸ்பத்திரியில் நிரந்தரமான சைக்கிள் பாதுகாப்பு முறை விரைவில் அமைக்கப்படும். ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் சைக்கிள்களை பாதுகாத்து கொடுக்க ஒரு பாதுகாப்பாளரும் நியமிக்கப்படுவர்.

அடையாள அட்டைகள் மூலம் சைக்கிள்கள் இங்கு பாதுகாத்துக் கொடுக்கப்படும். இதுபற்றிய பேச்சுவார்த்தையை ஆஸ்பத்திரி சுப்பிரிண்டன் டாக்டர் சண்முகநாதனும், பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கமும் நேற்று நடத்தினர்.

இப்புதியமுறை அடுத்த மாதம் முற்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரலாமென ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீயபழக்கங்களை...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

விளையாட்டு மைதானம் இல்லை. ஆகவே வலிவடக்கில் பொது விளையாட்டு மைதானம் அமைத்துத் தரும்படி வலிவடக்கு விளையாட்டுக் கழகத்தின் சார்பில்காரியாதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

வெற்றியீட்டிய கழகங்களுக்கு திரு. பி. எல். பற்றிக் பரிசில்களை வழங்கினார்.

திருமண அழைப்பு

யாழ். வண்ணார்பண்ணை தென் மேற்கு கிராமசேவையாளர் செல்வன் ஜூலியஸ்பெனடிக்ற் அவர்கட்கும் செல்வி மேரி ராஜராஜேஸ்வரிக்கும் 3-2-68-ல் கொட்டாஞ்சேனை தேவாலயத்தில் காலை 8 மணிக்கு மெய்விவாகச் சடங்கு நிகழும். யாழ்ப்பாணம் பண்ணை வீதி, 14-ம் இலக்க இல்லத்தில் 17-2-68-ல் மாலை விருந்துபசாரம் நடைபெறும். உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். ஏ. ஜே. தம்பிநாயகமும்பாரியாரும், 66, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை. 1851

ஐயாறன்

[5-ம் பக்க தொடர்ச்சி]

களின் 'லிஸ்ட்' ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அதிகமானவர்கள் இலங்கையிலிருந்து வந்துள்ளதால் நிலைமையில் சற்றே சிக்கல் ஏற்பட்டுள்ளது. என்றாலும் எல்லோருக்கும் தக்க ஒழுங்குகளை செய்வோம்'' என்று மிக அன்பாகவும் கண்யமாகவும் கூறி எங்கள் மனதைக் குளிரச்செய்தார். அவர் கொடுத்த இடாப்பில் என் பெயரும் இருந்ததைக் கண்டதும் எனக்கு ஒருவித ஆறுதலாக இருந்தது. 'புதிய எம். எல் ஏ. ஹாஸ்டலில்' எனக்கு இடமிருப்பதாயும் அங்கு செல்லலாமென்றும் தெரிவித்தார். மற்றவர்களுக்கும் இடம் கிடைத்த பின்னரே செல்லுவதாகச் சொன்னேன். உபசரணைத் தலைவர் சற்று நேரம் தம் சகாக்களுடன் கலந்து யோசித்தபின் ஒரு பெரிய ஹோட்டலில் அவர்களுக்கெல்லாம் இடம் ஒழுங்குசெய்தார். 'ஏர் கண்டிஷன்' முதலிய விசேஷ வசதியுள்ள அறைகள். முதல் நாள் வந்ததும் மனம் சோர்ந்திருந்த அவர்கள் மறுநாள் மிக மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்! உபசரணைக் குழுத் தலைவர் பதவிக்கு திரு. டி எஸ். நாராயணசாமியை விடச் சிறந்த ஒருவர் கிடைத்திருக்க முடியாது. இவ்விழா எதிர்பார்த்ததை விட மேலானதோர் வெற்றியை அளித்திருப்பின் அதற்குக் காரணம், உபசரணைக் குழுத் தலைவரும் அவரது மேலான சகாக்களுமே. அவர்கள் வாழ்க!

நெல் அறுவடை

பண்டத்தரிப்பு, செவ்வாய்

இப்பகுதிகளில் [illegible] நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. வயல்களில் ஈரலிப்புத் தன்மை அதிகம் இருப்பதால் அறுவடையின் பின்னர் மாற்றுப்பயிர்கள் செய்யப்படலாமெனத் தெரிகிறது.

கவிஞர் கண்ணதாசனுக்கு அபராதம் அல்லது சிறை

சென்னை, ஜன 30.

தமிழ்நாட்டுப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதியால் தொடரப்பட்ட மானநஷ்ட வழக்கில் கவிஞர் கண்ணதாசனுக்கு 500 ரூபா அபராதம் அல்லது இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சென்னை செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி திரு. என் எஸ். இராமசாமி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மேலும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தனுஷ்கோடி நாடாருக்கும், ஒருவருட நன்னடத்தைப் பிணையாக ரூபா 500 அமராதம் விதிக்கப்பட்டது திரு. தனுஷ்கோடிநாடார் 'நவசக்தி' என்ற நாளிதழின தர்மகர்த்தா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தவழக்கில், சென்றவருடம் ஏப்ரல் மாதம் 13-ந் திகதி வெளியாகிய நவசக்தி இதழில் அமைச்சர் கருணாநிதியின் கௌரவத்திற்குபங்கம் ஏற்படும் வகையில் ஒரு கட்டுரை வெளியிட்டதாக கவிஞர் கண்ணதாசன், நவசக்தியின் கௌரவ ஆசிரியர் திரு. ஈ. கே வி. சம்பத், திரு. தனுஷ்கோடி நாடார் ஆகியோருக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை ஆரம்பத்தில், திரு. சம்பந்திற்கு எதிரானகுற்றச்சாட்டுக்கு ஆதாரம் கிடையாது என்ற காரணத்திற்காக அவர் விடுதலை செய்யப்பட்டார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு பிரசாரக்குழு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களில் தீவிர கவனம்செலுத்தும்பொருட்டு தேர்தல் அபேட்சகர்களை நியமனம் செய்யவும், பிரச்சாரம் செய்யவுமென ஒரு குழு நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சி பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுவாலிபமுன்னணியின் செயலாளர் திரு. அருணாசலத்தை அழைப்பாளராகவும் செனட்டர் நடராஜா, கோப்பாய் எம். பி. திரு. எஸ்- கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் உட்பட 6 பேரை உறுப்பினராகவும்கொண்ட குழு இங்கு தெரிவுசெய்யப்பட்டது

இதேபோன்ற ஒரு தேர்தல் நியமன பிரச்சாரக் குழுவை கிழக்குமாகாணத்துக்கும் தெரிவதெனவும், இதற்குமுன்னாக கட்சியின் செயற்குழுக் கூட்டத்தை கிழக்குமாகாணத்தில் கூட்டி முடிவு செய்வதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. [கா. நி]

4-வது டெஸ்ட்

இந்தியா 6—193

சிட்னி, ஜன. 30

ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையில்சிட்னியில் நடைபெறும் 4-வது கிரிக்கெட் டெஸ்டில் 4-வது நாளான இன்று ஆஸ்திரேலியா தனது 2-வது இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 292 ஓட்டங்களை பெற்றது. ஆஸ்திரேலியா தனது 2-வது இன்னிங்ஸில் முதலில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 222 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால் இன்று மிகுதி 7 விக்கெட்டுகளையும் 70 ஓட்டங்களில் இழந்துமொத்தம் 292 ஓட்டங்களை பெற்றது. இதில கப்பர் 165 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் இன்றைய ஆட்டம் முடியும்போது 6 விக்கெட் நஷ்டத்துக்கு 193 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஆஸ்திரேலியாக் கோஷ்டியின் காப்டன் சிம்ஸனின் திறமையான பீலடிங்கால் தான் இந்தியா தனது 6 விக்கெட்டுகளையும் இழக்க நேர்ந்தது.

இந்தியா4-வது டெஸ்டில் வெற்றி பெறுவதற்கு இன்னும் 149 ஓட்டங்களை எடுக்க வேண்டும், ஆனால் அவர்கள் கைவசம் இன்னும் 4 விக்கெட்டுகள் தான் உள்ளன.

மசோதா.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொன்னம்பலம் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

ஒவ்வொரு கட்டமாகச் சென்று கடைசியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க 2 மாதகாலம் பிடிக்குமென விளக்கிக் கூறியதாகவும் தெரியவருகிறது.

தமிழ்காங்கிரஸ் பொதுச் செயலாளரும் உடுப்பிட்டி எம்.பி யுமான திரு எம். சிவசிதம்பரம், வாலிபமுன்னணித் தலைவரும் வவுனியா எம்.பி யுமான திரு. ரி. சிவசிதம்பரம் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இவர்கள் இருவரும் மாவட்டசபை மசோதாவை எதிர்ப்பதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் மாவட்ட சபை மசோதாவிற்கு பலத்த எதிர்ப்பு தெரிவித்ததாகவும், மாவட்ட சபை மசோதா எந்த ரூபத்தில் வந்தாலும் அதை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமெனச் சிலர் வற்புறுத்தினார்களென்றும் தெரியவருகிறது.

கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், தமிழ்க் காங்கிரஸ் மாவட்ட சபை மசோதா குறித்து இறுதி முடிவு எடுக்குமுன்னர் பார்லிமெண்டில் மசோதா சமர்ப்பிக்கப்படும் பொழுது என்ன உருவில் அமைகிறது என்பதை அறியும் வரை காத்திருப்பதென ஏக மனதாக கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதென தெரிவிக்கப்பட்டது.

பதக்கம்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற இன்னொரு இலங்கைக் கவிஞரான 'அம்பி' தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்குச் சென்றிருந்ததால் அங்கு தமக்குரிய பதக்கத்தையும் சான்றிதழையும் நேர்முகமாகவே பெற்றுக் கொண்டார். திரு நாகராஜனுக்குரிய பரிசுப் பொருட்களை மகாநாட்டுக்குச் சென்றிருந்த பண்டிதர் இரத்தினம் எம். பி கையேற்று இங்கு கொண்டு வந்திருந்தார். அவைகளை நேற்று திரு. நாகராஜன் பெற்றுக் கொண்டார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம்திகதி [illegible]பட்டது.